

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

தை - மாசி
பிப்ரவரி - 2021

மலர் 10 இதழ் 2

பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 9 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| கச்சிப் பெரும்பதி | 15 |
| ப்ரபோத சிந்தாமணி | 18 |
| பீஷ்மஸ்தவராஜம் - 2 | 20 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 22 |
| ஸ்ரீ மஹாஸ்வாமிகள் 27-வது வார்ஷிக ஆராதனை | 26 |
| ஸ்ரீ மடம் நிகழ்ச்சிகள் | 28 |
| மாசி மாத விசேஷ தினங்கள் | 32 |
| ப்ரதீபப் பேழை பகவத்கீதையின் அமைப்பு - 33 | 33 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 33 | 35 |
| புராணக்கதை | 36 |
| வேதாந்த ஸாரம் | 38 |
| மகாபாரத சுருக்கம் | 39 |
| அத்வைத வினா - விடை | 41 |
| ஸ்ரீமத் பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி-2 | 43 |
| தத்வசிந்தனை | 45 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 48 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்








ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

மனிதனாகப் பிறந்து விட்டாலே கவலையைத் தவிர வேறு ஒன்றும் படுவதில்லை. ''ஸஞ்சலம் ஹி மன:க்ருஷ்ண'' என்று அர்ஜுனன் கூறுவதை நாம் எல்லோரும் ப்ரதிக்ஷணம் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். மேலும் எதிர்பார்ப்புகளும் அதிகம். அவை நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னும் பயம். எதைத் தின்னால் பித்தம் தெளியும் என்னும் பயப் ப்ராந்தி நிலை. எந்த வழிபாட்டினால் தடைகள் நீங்கும் என்று எதிர்பார்ப்பு, அதற்கு உபாயம் என்ன? அதற்காக ஓடல். இப்படித் தான் நாம் ஓடுகிறோம்.

ஜோதிஷ சாஸ்த்ரத்தைக் குறை கூறவில்லை. மகரிஷிகளால் எழுதப்பட்டது உண்மை. சொல்ல வந்தது என்னவென்றால் ஒவ்வொரு க்ரகப் பெயர்ச்சிக்கும் பரிகாரம், பூஜைகள் அவைகளை நடத்துவதற்கு ப்ரயத்தனங்கள், எதிர்பார்ப்பு பொய்த்து விட்டால் ஜோஸ்யருக்கு நிந்தனை.

இப்படி நாம் வாழ்க்கையை நடத்துகிறோம். க்ரகப் பெயர்ச்சி இயல்பானது. நம்மைப் பாதிக்கலாம் பாதிக்காமலும் இருக்கலாம். இயற்கையாக நடக்கும் நிகழ்ச்சிக்கு ஆர்பாட்டம் அதிகம். நவக்ரஹ வழிபாடு வைதிகத்தில் உண்டு. தினசரி சந்த்யா வந்தனத்தில் நவக்ரஹாதி தர்ப்பணம் செய்யப்படுகிறது. எந்த சமயத்தில் நவக்ரஹ ஹோமங்கள் விதிக்கப்பட்டுள்ளனவோ அப்போது அவைகளைச் செய்வது உத்தமம். மக்கள் பயந்துபோய் நிறைய பரிகாரங்களைச் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். ஜோஸ்யர்களும் நல்ல வழிபாட்டைத் தான் காண்பிக்கிறார்கள். இதைவிட எளிதான வழி நம் கையில் உள்ளது.

மூக சங்கரர் காட்டும் வழி. மூக பஞ்சசதியில் பாதாரவிந்த சதகத்தில் 59ஆம் ஸ்லோகம் மூலமாகக் காட்டுகிறார். பார்ப்போம்.

**'ததானோ பாஸ்வத்தாம் அம்ருத நிலயோ லோஹித வபு;**
**வினம்ராணாம் ஸௌம்யோ குருரபி கவித்வம் ச கலயன்**
**கதௌ மந்தோ கங்காதரமஹிஷி காமாக்ஷி பஜதாம்**
**தம;கேதுர்மாதஸ்தவ சரணபத்மோ விஜயதே''**


கங்காதர மஹிஷியே உன்னுடையத் திருவடித் தாமரையானது ஒளிமிகுந்த தன்மையால் ஸூர்யனாகவும், அமிர்தமாக இருப்பதால் சந்த்ரனாகவும், சிவப்பாக இருப்பதால் செவ்வாயாகவும், வணங்குபவர்களுக்கு ஸௌம்யமாகவும் (புதன்) குருவாகவும் கவிதன்மையைத் தருவதால் சுக்ரனாகவும் மந்தகதியில் நடப்பதால் சனியாகவும், தன்னைப் பூஜிப்பவர்களுடைய அஞ்ஞானத்திற்கு விரோதியாகி அஞ்ஞானத்தை

அழிப்பதால் தமம் என்னும் ராகுவாகவும் கேதுவாகவும் (இவ்வாறு நவக்ரஹகங்கள் அடங்கியதாய் சிறந்து விளங்குகிறது).

நவக்ரஹகங்கள் தேவின் திருவடியிலேயே அந்தர்கதம். அம்பாளின் திருவடியைப் பூஜிப்பவர்கள் நவக்ரஹ பூஜாபலனைப் பெறுவார்கள் என்பது தாத்பர்யம்.

இது ராஜபாட்டை அல்லவா. சிந்தாமணியாக அவளது பாதம் நம் கையில். கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன். சற்று சிந்திப்போம். தினசரி பாராயணமாக வைத்துக் கொண்டால் எந்த பெயர்ச்சி என்ன செய்யும். நாம் நவக்ரஹ வழிபாட்டையோ ஜோஸ்யர்களையோ எதிர்க்கவில்லை. அதற்காக மிகவும் மாய்ந்து போக வேண்டாம். அம்பாளின் சரணங்களைத் த்யானிப்போம். மற்ற தேவதைகள் கைகளினால் அனுக்ரஹம் செய்வதை அம்பாளின் சரணங்கள் செய்யும். (சரணாவேவ நிபுணௌ) என்று ஸ்ரீ சங்கரர் சொல்வது முற்றிலும் உண்மையே.


நம் கையில் இருப்பதோ ராஜ இலச்சினை. வேறு முத்ரைகளுக்காக கவலை, அலைச்சல் படவேண்டாம். இதை வைத்துக்கொண்டு சாதிக்கலாம் என்று கூறிக்கொண்டு இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்.



அம்பாளுடைய அனுக்ரஹத்தினாலே, வித்யை, ஆரோக்யம், ச்ரத்தா, லக்ஷ்மீகடாக்ஷம், இப்படி, பல்வேறு ஸௌக்கியங்களை பக்தர்கள் பெறுகிறார்கள். देहि सौभाग्यमारोग्यं देहि मे परमं सुखम् - இப்படி அனைத்து, ஐச்வர்யங்களையும், அனைத்து சக்திகளையும் பெறுவதற்கு, லலிதாஸஹஸ்ரநாமம், அம்பாளுடைய ஸ்தோத்ரங்கள், அம்பாள் ஸம்பந்தப்பட்ட உபாஸனையை, மேற்கொள்ளவேண்டும்.

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



ஆனால் இவனையும் ஏன் க்ருஷ்ண பரமாத்மா நாலுவித பக்தர்களில் ஒருத்தனாக ச்லாகித்துச் சொல்கிறார் என்றால், அதற்கு ஒரு தினுஸான அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

அதாவது லோகத்தில் பலவிதமான தர்ம கார்யங்கள், ஸமூஹப் பணிகள் நடந்தாக வேண்டியிருக்கிறது. ஒரு கோயிலைப் புனருத்தாரணம் பண்ணிக் கும்பாபிஷேகம் நடத்த வேண்டியிருக்கிறது. பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி வைக்க வேண்டியிருக்கிறது, அநாதாச்ரமங்கள் வைக்க வேண்டியிருக்கிறது. வேத வித்துக்களை ரக்ஷிக்க வேண்டியிருக்கிறது. இப்படிப் பல பெரிய கார்யங்கள் நடந்தாக வேண்டியிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் நிறையப் பணம் தேவைப்படுகிறது. இந்தப் பணம் எங்கிருந்து வரும்? தங்கள் செலவுக்குப் போக தர்மம் செய்யக்கூடிய தனிகர்கள் இருந்தால் தானே அவர்களிடமிருந்து நல்ல கார்யங்களுக்காக த்ரவ்யம் கிடைக்கமுடியும்? இந்த மாதிரி, தனக்கென்று இல்லாமல் தன் தேவைக்கு மேற்பட்டதை லோகோபகாரமாக தர்மம் பண்ணுவதற்கே ஒரு அர்த்தார்த்தி பகவானிடம் ப்ரார்த்தனை பண்ணினால், அப்படிப்பட்ட ப்ரார்த்தனையை பகவான் ஒப்புக்கொள்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம்.

வர்ணாச்ரம தர்மங்கள் யதோக்தமாக நடைமுறையில் அநுஷ்டிக்கப்பட்ட காலத்திலேயே, ப்ராமணனுக்கு அபரிக்ரஹம், ஸமுத்ரத்தைத் தாண்டிப் போகக்கூடாது என்பது போன்ற கட்டுப்பாடுகளைப் போட்ட சாஸ்த்ரம், வைச்யர்களுக்கோ, 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று உபதேசம் பண்ணிற்று. என்ன காரணம்? அப்படி அவர்கள் த்ரவியம் தேடினால் தான் அநேக தர்ம கார்யங்கள் நடக்க முடியும். நடுவே அவர்கள் கொஞ்சம் அதிக ஸௌகர்யம் (லஷரி என்கிற போக்ய வாழ்க்கை) பெற்றாலும் பெற்று விட்டுப் போகட்டும்; அவர்கள் செய்கிற தானத்தினால் இந்த தோஷம்

நிவ்ருத்தியாகிவிடும். கொடுக்கக் கொடுக்கத் தானாகவே 'லக்ஷரி' பிடிக்காமல் போய்விடும். தனக்கு வசதி பண்ணிக்கொள்ளாமல் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்பதிலேயே ஆஸ்தை அதிகமாகும். அப்படியே இவன் தனக்காக ஒரு பங்களா வைத்துக்கொண்டாலும், அதிலே பத்து ஏழைகளுக்கு இடம் கொடுக்கத் தோன்றும்; கார் வைத்துக்கொண்டால் பிறத்தியார் நாலு பேருக்கு உதவியாக அதைக் கொடுக்கத் தோன்றும்.

மொத்தத்தில் ஞானியாகவும், ஞானத்தைத் தேடும் ஜிஜ்ஞாஸுவாகவும்தான் இருக்க வேண்டுமென்பதில்லை-ஆர்த்தனாகவோ, அர்த்தார்த்தியாகவோ இருந்தால்கூடப் பரவாயில்லை; ஏதாவது ஒரு விதத்தில் பகவான் என்று ஒருத்தனை நம்பி அவனிடம் போய்விட்டால் போதும், எதற்காக ப்ரார்த்தனை பண்ணினாலும் போதும், கொஞ்சம் கொஞ்சமாக இவனை ப்ரார்த்தனை மேலே அழைத்துக் கொண்டு போகும். முதலில் நிறைய செல்வம், செல்வாக்கு வேண்டும் என்று ப்ரார்த்தித்தால்கூட, காலக்ரமத்தில் தானாக இந்த மாதிரி ஆசைகள் குறையும். அப்புறம் அடுத்த ஸ்டேஜில் ஒரு கஷ்டம், ச்ரமம், வ்யாதி என்பதற்கும் ப்ரார்த்திக்காமல், நல்ல ஞான வைராக்யாதிகளுக்காகவே ப்ரார்த்தனை பண்ணத் தோன்றும். அதற்கப்புறம் இந்த ப்ரார்த்தனைகூட நின்றுபோய், பக்தியில் உள்ள ஆனந்தத்துக்காகவே பக்தியாக இருக்கிற உயர்ந்த நிலைக்குப் போய்ச் சேரலாம்.

இப்படி லோகரீதியான ப்ரார்த்தனைக்கும் நியாயம் காட்ட, ஸமாதானம் சொல்ல இடமிருக்கிறது. ஆசார்யாளின் ஸௌந்தர்யலஹரி' முடிவில் 'ஸரஸ் வத்யா லக்ஷ்ம்யா' என்று ஒரு ச்லோகம் வருகிறது. அந்த ச்லோகத்திலிருந்து அம்பாள் படிப்பு, பணம், மன்மதாகாரமான சரீர ஸம்பத் முதலான ஐஹிகமான (இக உலகத்து) பெருமைகளைக்கூட ஆரம்பக் காலத்தில் தந்து படிப்படியாக பசு பாச பந்தத்தைக் கத்திரித்துப் பரமானந்தத்தைத் தருகிறாள் என்று தெரிகிறது. ஆகையால் ஒரு 'ஸ்டேஜ்' வரை லௌகிகமாக ப்ரார்த்தனை பண்ணினால் அது தப்பில்லை என்று ஏற்படுகிறது.

ப்ரார்த்தனை பண்ணுகிற வழக்கம் எப்படியோ ஒரு விதத்தில் ஏற்பட்டுவிட்டால் தானாகவே அது காலக்ரமத்தில் ஆத்மா பிவ்ருத்திக்காக மட்டும் ப்ரார்த்திக்கிற நிலைக்குக் கொண்டு விட்டுவிடும்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# நளாயினி



### முற்பிறப்பின் பயன்

நிடத நாட்டை ஆண்டு வந்த நளச் சக்ரவர்த்தியின் புதல்வியான இந்திரசேனை என்பவள் பெருந் தபஸ்வியான மௌத்கல்யரை மணந்தாள். அம்முனிவர் நளாயினியின் கற்பை சோதிக்க விரும்பினார். குஷ்ட நோயால் வருந்தும் முதியவரானார். சில நாட்களில் உடல் எலும்பும் தோலுமாகத் தோற்றமளித்தது. துர் நாற்றம் வீசியது. ஆயினும் மனத்தில் எந்தவித அருவருப்பின்றி நளாயினி அவருக்குத் தொண்டு புரிந்து வந்தாள்.

ஒருநாள் முனிவர் உணவு உண்ணும் போது அவருடைய அழுகிய கட்டை விரல் உணவில் உதிர்ந்து விழுந்தது. பின்பு அதே இலையில் உணவை உண்ட நளாயினி எந்தவிதமான அருவிருப்பின்றி அதனை உணவிலிருந்து ஒதுக்கி விட்டு மீதியிருந்த அன்னத்தை உண்டாள். மற்றொரு சமயம் முனிவர் திருத்தல யாத்திரை செய்ய விரும்பிய போது நளாயினி அவரைக் கூடையில் சுமந்து சென்றாள். வழியில் அரச கட்டளையால் கழுவேற்றப்பட்டுத் துடிக்கின்ற (ஆணி) மாண்டவ்யர் என்ற முனிவரின் காலில் அந்தக் கூடைபட்டது. அவர் வலி பொறுக்காமல் சூரியன் உதிக்கும் போது கூடையில் இருப்பவன் மரிக்கட்டும் என்று சாபமிட்டார். ஆனால் நளாயினி சூரியன் உதிக்காமல் போகட்டுமென்று சூளுரைத்தாள். சில நாட்கள் உலகம் இருளில் மூழ்கிக் கிடந்தது. தேவர்கள் அனைவரும் நளாயினிக்கும் மௌத்கல்யருக்கும் நல்வாழ்வை உறுதி செய்ததும் நளாயினி இருள் விலக ஒப்புக் கொண்டாள்.

மௌத்கல்யரும் தன் மனைவி சிறந்த பதிவிரதை என்பதைக் கண்டு மகிழ்ந்து அவள் விருப்பப்படியே மீண்டும் இளமையான உருவத்தை அடைந்தார்.

கணவன், மனைவி இருவரும் இல்லற இன்பம் துய்த்தனர். பல உருவங்களை எடுத்து வாழ்ந்தனர்.

காலம் சென்றது. மௌத்கல்யர் தன் இலட்சியமான தவ வாழ்க்கையினை மேற் கொண்டார். நளாயினி அவருடன் இன்ப வாழ்க்கையை நடத்த விரும்பிய போது அவளை அவர் புவியில் மீண்டும் பிறந்து அடுத்த பிறவியில் இல்லற இன்பம் நுகரும்படி வாழ்த்திச் சென்றார்.

நளாயினி மகேசுவரனை நோக்கித் தவமிருந்தாள். அவளுடைய தவத்தால் மகிழ்ந்த பரமேசுவரன் அவளுக்கு என்ன வரம் வேண்டும் என்று வினவ அவள் 'தவமும் இன்பமும் சேர, பதி வேண்டும். பதி வேண்டும், பதி வேண்டும், பதி வேண்டும், பதி வேண்டும்' என்று கூறினாள். ஈசனும். இப்பிறவியில் இன்பமும் தவமும் சேர்ந்து வாய்க்காது எனினும் அடுத்த பிறவியில் ஐந்து பதிகளை அடைந்து இரண்டையும் பெறுவாய்' என்று வாழ்த்தினார். மேலும் ஒரு குகையில் அமர்ந்திருந்த, தேவேந்திரனுக்கொப்பானவர்களும், அவளுக்கு கணவன்மார்களாக அமையப் போகின்றவர்களுமான ஐவரையும் காணச் செய்தார்.

பாஞ்சால நாட்டில் துருபத மன்னன் செய்த வேள்விக் கனலில் நளாயினி அம்மன்னனுக்கு மகளாகத் தோன்றினாள். அவளே திரௌபதி என்னும் மகாபாரதக் காப்பியத்தின் தலைவி. துருபத மன்னன் நடத்திய சுயம் வரத் தேர்வில் அருச்சுனன் பெரும் வில்லை வளைத்து, சுழலும் சக்கரத்தின் வழியாக இலக்கை அடிக்கும் போட்டியில் வெற்றி பெற்றான். குந்தியின் கட்டளையால் திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவியானாள். ஐவருக்கு ஒருத்தி எப்படி மனைவி ஆகலாம் என்று துருபதன் தயங்கிய போது வியாச முனிவர் திரௌபதியின் முற்பிறப்பை விளக்கும் போது நளாயினி தன் தாயான தமயந்தியைப் பார்க்கிலும் அதிக மேன்மை பெற்றாள் என்று புகழ்ந்தார்.


## ஸனாதன தர்மப்புதிர்கள் பிப்ரவரி வினாக்கள்

1. நீலகண்ட தீக்ஷிதரின் முதல் நூல்
2. தத், க்ரது, ந்யாயம் விளக்குக
3. நவகோடிக்கு அடிபதியான நபர் பாண்டுரங்கனின் பக்தரானார் இவர் யார்?
4. ஞான சம்பந்தரால் சூலை நோய் நீக்கப்பட்ட மன்னன் யார்?
5. த்ருஸ்ய காவ்யம் என்பது எது?
6. மஹா விஷ்ணு சக்ரம் பெற வேண்டி தன் கண்களை அர்ச்சித்த இடம் எது?
7. கிணற்றில் கங்கை தோன்றிய அதிசய நாள்
8. தமிழகம் தாண்டி உள்ள சிவனடியார்களை சைவம் எப்படி அழைக்கும்?
9. பட்டினத்தாரின் இயற்பெயர் என்ன?
10. கரடி வேந்தர் எனப்படுபவர் யார்?

# அனுக்ரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஸ்ரீ ராம ஜன்மபூமி விழா - 1.02.2021



இன்றைய தினம் பொன்னான நாள். எந்த ஒரு நல்ல அறப்பணிக்காக ஆயிரக் கணக்கானவர்கள் அர்ப்பணித்து உணர்வுடன் இந்த அறப்பணியை முன்னின்று நடத்திக் கொண்டு வருகிறார்களோ அவர்களெல்லாம் சந்தோஷப் படக்கூடிய த்ருப்தியை தரக்கூடிய பெருமை படக்கூடிய ஒரு நன்னாள்.

இந்த இடம் இன்றைய சூழ்நிலையில் சிறிய இடமாக இருந்தாலும் சீரிய இடமாக நம்மால் பார்க்கப்படுகிறது. இந்த வளாகத்தில்தான் இதற்கான பல ஆலோசனைகள் பல்வேறு முயற்சிகள் பல்வேறு வேள்விகள் இதெல்லாம் பல காலமாக பல்வேறு சம்பிரதாயங்கள் சொல்லப்போனால் பல்வேறு சமயத்தை சார்ந்தவர்கள் கூட பல்வேறு சமயங்களிலே வந்து சென்று இருக்கிறார்கள் இந்த இடத்திற்கு .

ஒரு முறை ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் ரயில்வே துறை மந்திரியாக இருந்த போது இந்த இடத்திற்கு மகா பெரியவர்களை சந்திப்பதற்காக இங்கே வரும் போது அதாவது மையமானவர்களை வைத்து சுமுகமான தீர்வு எட்டப்படவேண்டும் என்பதற்காக அவர் தேர்ந்து எடுக்கப்பட்டாரோ என்னவோ தெரியாது அவர் இங்கு வந்து பஞ்ச கச்சம் கட்டிக்கொண்டு வந்து பெரியவர்கள் இடத்திலே இதே வளாகத்திலே தரிசித்து பல நேரம் பேசிக் கொண்டு இருந்தார்.

ஆந்திர மாநிலத்தின் கவர்னர் ஆக விளங்கிய கிருஷ்ண காந்த் அவர்கள் பல மணி நேரம் தங்கி பேசினார்கள். பிற சமயத்தைச் சார்ந்த மத்திய பிரதேஷ் மற்றும் பீகார் மாநிலத்திலே கவர்னராக விளங்கிய இருவர் வந்து அந்த நேரத்திலே வந்து பேசிச் சென்றார்கள். இப்படி பலரும் பல்வேறு அரசாங்கங்கள் 1980ல் இருந்து ஆரம்பித்த இந்த 80கள் 90கள் இந்த 2020 வரை இருக்கக் கூடிய இந்த நாற்பது வருஷங்களிலே பல முயற்சிகள் நல்ல எண்ணத்தோடு பணித்தமாக இந்த இடத்தில் இங்கே தான் அருகாமையிலே சிலா பூஜனம் அசோக் ஜீயும் இங்கு வந்து இருக்கக் கூடிய நம்முடைய வேதாந்தம்ஜீ அவர்களும் இன்னும் பலரும் வந்திருந்த சந்தர்ப்பத்திலே பெரியவர்கள்

மஹா பெரியவர்கள் பல்லக்கு பக்கத்திலே இருந்து அந்த சிலா பூஜனத்திற்கு அனுக்கிரகம் செய்தார்கள்.

கவர்னர் அவர்கள் தெரிவித்தது போன்று அந்த தரிசனத்திற்காக திறந்து விட்ட நேரத்திலே 80களிலே இடம் என்பது முக்கியமானது. அந்த நேரத்திலே அலகாபாத்திலே ப்ரயாகையிலே நமது புதுப் பெரியவர்கள் இருந்தார்கள். இங்கிருந்து பெரியவர்களுடைய அனுக்ரகத்தோடு இங்கே இருக்கும் குருமூர்த்தியின் மாமா அவர்கள் கண்ணன் இங்கு இருந்தார்கள். எல்லோரும் சேர்ந்து இங்கிருந்து flight இரண்டு பேரை அனுப்பி சத்திரமும் சாமரமும் அனுப்பி வைத்தார்கள். குடையும் வெண்குடையும் சாமரமும் இங்கிருந்து அனுப்பி வைத்து அலகாபாத்தில் இருந்து இன்றைய திருவேணி முன்னாடியும் திருவேணி தான். நடுவிலே ஒரு பெயர் வந்தது; அந்த திருவேணி சங்கமத்தில் இருந்து அயோத்தி வருவதற்குள் இவர்கள் சென்று துளசி ராமாயணத்தையும் வால்மீகி ராமாயணத்தையும் பாராயணம் செய்து இந்தக் குடையையும் அந்த சாமரங்களையும் முதல் மரியாதையாக காஞ்சீபுரத்தில் இருந்து அயோத்திக்கு சென்றது காமாக்ஷியின் தவப்புதல்வனான சக்கரவர்த்தி திருமகன் ராமருக்கு.

ஏனென்றால் காமாக்ஷி அம்மன் இடத்திலே தவம் செய்து அவர் பிறந்தவர் என்பதனாலே காமாக்ஷியின் தவப்புதவர் ராமபிரான். அந்த ராமபிரானுடைய அழகான கோவில் புனிதமான கோவில் அயோத்திக்கும் காஞ்சிபுரத்திற்கும் தொடர்பு இருக்கிறது. சிவ பெருமானுடைய பஞ்ச பூதஸ்தலங்களிலே ப்ரித்வி ஸ்தலம் காஞ்சிபுரம். அம்மனுடைய பஞ்ச பூதஸ்தலங்களிலே ப்ரித்வி க்ஷேத்திரம் அயோத்தியா. அயோத்தி என்பது சக்தி பஞ்சபூத ஸ்தலங்களிலே ப்ரிதிவி க்ஷேத்திரத்தை சார்ந்தது. ஆகவே இந்த சிவ-சக்தி க்ஷேத்திரங்களாக அயோத்தியும் காஞ்சிபுரமும் விளங்குகின்றன.

ஆகவே இந்த காஞ்சீபுரமும் அயோத்தியும் ஒரு சேர்ந்து செய்ய வேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன. அது போன்று காஞ்சி காமகோடி பீடத்திற்கும் இந்த அயோத்தியா ராம ஜன்ம பூமி இயக்கத்திற்கும் நெருங்கிய ஒரு தொடர்பு பல காலமாக இருந்து வருகிறது. இதிலே ஆயிரக்கணக்கானவர்கள் மனதாலும் உடம்பினாலும் ; அதாவது தியாகம் சேவை ஒற்றுமை அற்பணிப்பு என்பதற்கும் சேர்ந்து செல்லுதல் சேர்ந்து பணி புரிதல் என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்த இயக்கமானது நம்முடைய நாட்டினுடைய பெருமையை பொறுமையையும் விளக்கி இருக்கிறது. உண்மையையும் விளக்கி இருக்கிறது இந்த ஒரு இயக்கமானது. இப்படி நல்ல முறையிலே இந்த ராமபிரான் உலகத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குபவர்.

எங்கேயோ தாய்லாந்தில் இருப்பவர்களும் இந்த ராமருடைய பெயரைத் தாங்கி அரசாட்சி செய்கிறார்கள். இப்படி உலகம் முழுவதும் இந்த ராமபிரானுடைய பெயர் வியாபகமாக இன்றைக்கும் நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். அவர் அனைவரையும் சந்தோஷப்படுத்தியவர். தன்னுடைய பண்பினால் சந்தோஷப்படுத்தியவர். பட்டதினாலேயோ பதவியினாலேயோ அதிகாரத்தினாலேயோ அவர் சந்தோஷப்படுத்தினார் என்பதை விட தன்னுடைய பண்புகளின் குணங்களின் காரணமாக பண்பை ஆதாரமாகக் கொண்டு முக்கியமாகக் கொண்டு வாழ்க்கை முறை என்ற இந்திய கலாசாரத்தின் எடுத்துக் காட்டாக ஆதர்சனமாக விளங்கக்கூடிய இராமபிரானுக்கு ஒரு மரியாதையின் அங்கமாக அடையாளமாக விளங்கப் போவது இந்த ஒரு திருக் கோவில்.

ஆகவே அந்த ஒரு கோவில் என்பது இராமபிரானுடைய பண்புகளை உலகம் முழுவதும் அனைவருடைய உள்ளத்திலேயும் குடி கொண்டிருப்பவர். குடிசைகளிலிருந்து ஆரம்பித்து அனைவர்களின் உள்ளத்திலேயும் குடிகொண்டு இருப்பவர். ராமபிரான் தண்டகாரண்யம் செய்யும் போது வனத்திலே மட்டும் அவர் பிரவேசிக்கவில்லை. வனத்தில் பிரவேசிக்கும் அதே நேரம் நல்ல உள்ளம் எங்கெல்லாம் இருக்கின்றதோ அது மாளிகைகளிலும் இருக்கலாம் குடிசைகளிலும் இருக்கலாம் விவசாயிகளாகவும் இருக்கலாம் தொழிலாளிகளாகவும் இருக்கலாம் முதலாளிகளாகவும் இருக்கலாம். எந்த நிலையிலே இருந்தாலும் நல்ல உள்ளம் என்பது இருந்தால் அங்கு ராமபிரான் குடி கொண்டு இருக்கிறார் என்பதாக மஹாகவி காளிதாசர் நமக்கு குறிப்பிடுகிறார். அப்படி அந்த நல்லதக்கு உதாரணமாக இருக்கக் கூடிய அந்த இராமபிரானுடைய ஆலயம் சிறப்பான முறையிலே நடை பெறுவதற்கு இந்த ஒரு ஆறு ஏழு மாதங்களாக விளங்கக்கூடிய பல்வேறு சிரமங்கள் மத்தியிலேயும் பெரும் திரளாக மக்கள் இங்கு ஆர்வமாக ஏனென்றால் அவரவர்களுக்கும் பல்வேறு சிரமங்கள் இருந்தாலும் இதன் நடுவிலே இந்த தாராளமாக விஷ்வ ஹிந்து பரிஷத் தமிழ்நாடு சேர்ந்தவர்கள் ஆந்திராவில் இருந்து எம். எஸ். மூர்த்தி அவர்கள் குடும்பத்தை சார்ந்தவர்கள் கவர்னர் அவர்கள் சிறப்பாக பாராட்டிய மணிக்குடி வெங்கட்ராமையர் ஜெயராமன் அவர்களுடைய குடும்பம் மோகன் போன்றவர்கள் இப்படியெல்லாம் பலரும் சேர்ந்து இவ்வளவு அவ்வளவு என்று அல்ல; அனைவருடைய உள்ளங்களும் சேர்ந்து இருக்கின்றன. அனைவருடைய காணிக்கையும் இங்கு சேர்ந்து இருக்கின்றது. அதுதான் இராமபிரானுடைய தத்துவம். இராமபிரானுடைய தத்துவத்தை உலகம் முழுவதும் பரப்பினால் இந்தியாவிற்கும் சுபிக்ஷம் உலகத்திற்கும் நல்ல ஒரு அமைதி ஏற்படும்.

அந்த இந்தியாவுடைய பெருமைக்கும் இந்தியாவுடைய வலிகள் நீங்கி இந்தியா வலிமையோடு விளங்குவதற்கு இராமபிரானுடைய வீரமும் விவேகமும் பக்தியும் நல்ல குணங்களும் நமக்கு எடுத்துக்காட்டாகவும் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் வழிகாட்டி என்பது ஒன்று உறுதுணை என்பது என்று ஒன்று. ஆகவே அந்த பக்தி என்பது அனைவருடைய உள்ளத்திலேயும் வளர வேண்டும். பக்தி என்றால் தெய்வ பக்தி மட்டுமல்ல. மனித உறவுகளுக்கு மத்தியிலே இருக்க வேண்டிய பக்தி.

குடும்பங்களிலே இருக்க வேண்டிய ஒருவரை ஒருவர் நம்ம வேண்டிய நட்புடன் பழக வேண்டிய மதிக்க வேண்டிய இணைந்து செயல் பட வேண்டிய பக்தி. பக்திதான் அனைவரையும் இணைத்து வைத்து இருக்கிறது.

ஆகவே சமுதாயத்திலே வளர வேண்டிய பக்தி பொறுப்பு உணர்ந்து செயல்படுதல். அந்த பக்தி அனைவரிடத்திலும் ஒவ்வொரு பிரஜைகள் மத்தியிலேயும் பக்தி வளர வேண்டும். தெய்வ பக்தி வளர வேண்டும். இராம பக்தியும் வளர வேண்டும். வளர்ந்து அதன் மூலம் சிறப்பான முறையிலே சாந்த ரீதியிலே இந்தக் கோவில் அதற்காக பலரும் தியோரா பாபாவில் இருந்து ஆரம்பித்து பலரும் இதற்காக பெரும் முயற்சிகள் பல்வேறு மகான்கள் பல்வேறு சித்தர்கள் பல்வேறு-அதாவது ஊர் பேர் தெரியாது. எங்கிருந்தோ மூலை முடுக்கில் எல்லாம் இருப்பவர்கள் எல்லாம் வேலை செய்து சிறப்பான பணி மிக சிறப்பான முறையிலே சங் பரிவார் முப்பதுக்கும் மேற்பட்ட அமைப்புகள் இப்படி பலரும் சேர்ந்து இதை இராமபிரானுக்கு அணிகலன்காக இருந்தன. இது போன்று இந்த ஆலயம் கட்டும் பணியிலேயும் தொடர்ந்து அனைவரும் ஒற்றுமையுடனும் அன்புடனும் பக்தி ச்ரத்தையுடன் ஈடுபட்டு விரைவாக அந்த இராமபிரானுடைய அந்த ஆலயம் நிர்மானம் செய்யப்பட்டு அந்த கும்பாபிஷேகம் எல்லாம் சிறப்பாக நடைபெறுவதற்கு இந்த குருவருளும் திருவருளும் துணை நிற்க வேண்டும்

இரண்டு பெரியவர்களும் அதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் அவர்கள் அளித்த ஆசிகள் இந்த ஆண்டு ஆகஸ்ட் 5ம்(2019) தேதியன்றும் யாதர்சிகமாக நம்முடைய புதுப்பெரியவர்களுடைய பிறந்தநாளாக அது அமைந்தது. இப்படி பிப்ரவரி மாதம் இரண்டு வருஷங்களுக்கு முன்பாக மூன்றாவது வாரம் ஒரு பக்த பிரமுகர் சுப்ரீம் கோர்ட்டிலே இந்த வாதங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. நல்ல தீர்மானங்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது நீங்கள் வந்து திறந்து வைக்க வேண்டும் கலந்து கொள்ள வேண்டும் என்ற செய்தியைச் சொன்ன போது கையைத் தட்டி தன்னுடைய சந்தோஷத்தை புதுப் பெரியவர்கள் வெளிப்படுத்தினார்கள் × பிப்ரவரி

25ம் தேதி. அவருடைய மனதிலே அந்த இராமபிரானுடைய ஒரு நினைவு. இந்த ஒரு சிறந்த முயற்சிக்காக பாடுபட்டவர்களுக்கு சமுதாயம் அவர்கள் அனைவரையும் நினைவு வைத்திருக்கும்.

தொடர்ந்து இந்த நல்ல முயற்சி நம்முடைய தேசத்தை வலுப்படுத்துவதற்கும் நம்முடைய தேசம் உலகத்திலே ஒரு சிறந்த நல்ல இடத்தைப் பெறுவதற்கும் சிறந்த ஓர் இடத்தை-ஐந்து ஆறு பேர் அங்கு உட்கார்ந்து கொண்டு இருக்கார்கள் அங்கே. அந்த இடத்தில் இந்தியாவும் உட்கார வேண்டும்-பாதுகாப்பான அந்த இடத்திலே அமர்வதற்கு பாதுகாப்புக்கான இடத்திலே நம் தேசம் அமைவதற்கு. அது போன்று ஒரு சிறந்த இடத்தை. நம்முடைய பல்வேறு நல்ல பணிகளை நாம் செய்து கொண்டு இருந்தாலும் உலகளவிலே அதற்குரிய அதிகாரமும் அங்கீகாரமும் அபிமானமும் நமக்கு கிடைக்கப் பெற்று இந்த இராமருடைய பலம் பல்வேறு விதமான பலம் நமக்கு ஊன்றுகோலாக ஊக்கு சக்தியாக ஊற்றுக்கண்ணாக நமக்கெல்லாம் அமைந்து அந்த ஆத்ம சக்தி இராமபிரானுடைய ஆத்ம சக்தியானது நமக்குஉறுதுணையாக இருக்க வேண்டும்.

இந்த ஒரு நிகழ்ச்சியிலே தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்ஜி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இந்த நல்லதொரு ஆலயம் அமைய வேண்டும் என்பதற்காக 1980களில் இருந்து அவர் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டவர். அந்தவிதத்திலேயும் தனிப்பட்ட முறையிலேயும் அவர் அதாவது விகர்ணன் என்று சொல்வார்கள். நூறிலே ஒரு வித்யாசப் பட்டவர். பல எண்ணிக்கையிலே பல எண்ணங்களோடு இருந்தபோது அவர் தனிமனிதராக இந்த அயோத்தியிலே ஒரு ஆலயம் அமைப்பதற்காக அன்றைய தினங்களிலே அவர் பெரும் முயற்சியை எடுத்துக் கொண்டவர் என்பதும் அவரை இங்கு ஒரு சிறப்பு விருந்தினராக அழைப்பதற்கு ஒரு முக்கியமான காரணம். ஆகவே ஆராதனை அன்று மஹா ஸ்வாமிகளின் ஆராதனை அன்று யாரை இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கலாம் என்று யோசித்த போது இந்த கவர்னர் அவர்களை அழைப்பது என்று தீர்மானம் செய்து அவரும் இந்த நேரத்திலே சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கின்றார். ஆகவே அவர் தமிழக ஆளுநர் என்பது தமிழக நிகழ்ச்சிக்கு பொருத்தமான பெருமையான ஒரு விஷயம். அதோடு சேர்ந்து இந்த இயக்கம் வலுப்படுவதற்கு தனி மனிதராகவே இருந்து பெரும் முயற்சியை சுலபமாக இது நடைபெற வேண்டும் சுமுகமாக இது நடைபெற வேண்டும் சீக்கிரமாக நடைபெற வேண்டும் என்பதற்காக அவர் முயற்சி எடுத்தார். இணக்கம் என்பது மனிதர்களுக்கு இடையிலே ரொம்பவும் முக்கியமானது. இதிலே ராம ஜன்ம பூமியிலே தற்போது உடுப்பி பேஜாவர் ஸ்வாமிகள் வாரிசான

*நம்முடைய விஸ்வப்ரசன்ன தீர்த்த ஸ்வாமிகள் பங்கு பெற்று இருக்கிறார்கள். அது ஒரு நல்ல விஷயம். மக்களிடத்திலே கர்நாடக தமிழக மக்களிடத்திலே இணக்கத்தை ஏற்ப்படுத்துவதற்க்கான தூதராகவும் நாம் அவரை பார்க்க முடிகிறது. அழகான தமிழிலே கன்னடத்தை சார்ந்தவர்கள் தமிழிலே நல்ல சொற்பொழிவு தந்தார்கள்.*

*நம்முடைய பெரியவருடைய ஆசியைப் பெற்ற பைதான் என்ற இடத்திலே ஞானதேவ் மகாராஜ் ஏக்நாத் மகராஜ் பிறந்த இடத்திலே அவர்கள் கோவிந்தகிரி மகாராஜ் அவர்கள்.சங்கத்தோடு பலநாட்களாக அறிமுகமானவர். இந்தியா முழுவதும் முப்பதைந்துக்கும் மேலான வேதபாட சாலைகளை அவர் நடத்திக் கொண்டு வருகிறார். அந்த அமைப்பின் வேதமஹரிஷி பிரதிஷ்டான் மூலமாகவும் திருப்பணிக்காக ரூபாய் 11 லட்சம் அவர்கள் அளித்து உள்ளார்கள். விஷ்வ ஹிந்து தமிழகத்தின் சார்பாக 18 ½ லட்சமும் பல்வேறு கல்வி நிறுவனங்களாக கொடுத்து இருக்கிறார்கள். அதே போன்று எம்.எஸ். மூர்த்தி அவர்களின் குடும்பம் ரூபாய் 25 லட்சம் கொடுத்து இருக்கிறார்கள். இதே போன்று பலரும் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எல்லாவற்றிக்கும் சிகரம் வைத்தாற்போல் மணிக்கொடி அவர்கள் மணிக்கொடி அங்கே பறப்பதற்காக அயோத்தியில் மணிக் கொடி பறப்பதற்காக இந்த சிறப்பான நன்கொடை அளித்து இருக்கார்கள் .*

*நம்முடைய நாட்டிலே கொடை என்பது வளர வேண்டும். நல்ல குடையும் இருக்க வேண்டும். நல்ல கொடையும் இருக்க வேண்டும். நிர்வாகம் செய்ய நல்ல குடை தேவை. கிராமப்புறங்கள் வளர நல்ல கொடை தேவை. நம்முடைய நாட்டிலே ஈவு இரக்கம் வளர வேண்டும். இந்தியாவிற்கு கிடைக்க வேண்டிய ஈவுத் தொகை உலகளவிலே இந்தியாவிற்கு கிடைக்க வேண்டிய ஈவுத் தொகை-அதாவது நம்முடைய பங்கை நாம் பெற வேண்டும். இந்தியா என்பது பாரதம் என்பது உலகளவிலே நல்ல ஒரு இடத்தில் வர வேண்டும். அதற்கு உலக நாடுகள் அனைத்தும் நம் மீது இரக்கம் காட்ட வேண்டும். இதற்கு நம்முடைய சக்தி வளர வேண்டும். பக்தியும் வளர வேண்டும். இந்த அனைத்துக் குணங்களுக்கும் இருப்பிடமாக இருக்கக் கூடிய -**சமஸ்த கல்யாண குணாதி ராமஹா** அனைத்து நல்ல குணங்களுக்கும் இருப்பிடமாக இருக்கக் கூடிய அந்த இராமபிரானுடைய அருள் ஆஞ்சநேய சுவாமியுடைய சேவா மனப்பான்மை -**புத்திர் பலம் யேசோ தைர்யம் நிற்பயத்வம் அரோகதா ....** என்கிற அனைத்துக் குணங்களும் நமக்கு அமைந்து **தர்மோ ரக்ஷிதி ரக்ஷிதஹா** அந்த தர்ம சக்தி நம்மிடையே வளர்வதறகு இராம பிரானை பிரார்த்தனை செய்வோம்.*

**ஹர ஹர நமப் பார்வதி பதயே ஹர ஹர மகா தேவா**

# கச்சிப் பெரும்பதி

கி. வா. ஜகந்நாதன்

தமிழ் நாட்டில் ஐந்து மண்டலங்கள் சிறப்புற்று விளங்கின. அவை சோழ மண்டலம், பாண்டிய மண்டலம், சேர மண்டலம், கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம் என்பன. இவற்றில் தொண்டை மண்டலம் அல்லது தொண்டை நாட்டின் தலைநகரம் காஞ்சீபுரம். முக்தி நகரங்கள் ஏழில் ஒன்றாக வைத்துப் பாரதநாடு முழுவதும் மதிக்கப் பெறும் நகரம் இது. 'காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி' என்று வழங்கும் பழமொழியில் முதலிடம் பெறுவது. ஐந்து மண்டலங்களில் மற்ற மண்டலங்களின் தலைநகரங்கள் சிற்றூராக இருக்கின்றன. ஆனால் காஞ்சியும், மதுரையும் இன்றும் பழமைச் சிறப்பு மாறாமல் புதிய பொலிவும் பெற்று விளங்குகின்றன. இதற்குக் காரணம் காமாட்சியின் அருளும், மீனாட்சியின் அருளுமேயாகும்.

வடக்கே ஒரு நாலந்தா இருந்த மாதிரி, தெற்கே ஒரு காஞ்சி மாநகரம் பல கலை வல்லுநர்களும் இருந்து கல்வியை வளர்க்கும் இடமாக இருந்தது. வடமொழியும், தென்மொழியும் இணைந்து வளர்ந்த இடம் இது. வைஷ்ணவமும், சைவமும் நிலைநிற்கும் திருத்தலம் இது. பௌத்தமும், சைனமும் இடம் பெற்ற பதி இது. காஞ்சிக் கடிகை என்பது மிகவும் புகழ் பெற்ற கலைக்கூடமாக நிலவியது.

வடமொழி நூல்களிலும், தமிழ் நூல்களிலும் மிகப் பழங்காலந் தொட்டு இதன் பெருமை பேசப்படுகின்றது. இங்கே இருந்து அரசாண்ட தொண்டைமான் இளந்திரையனைப் பற்றிய புகழ் பெரும்பாணாற்றுப்படை என்ற நூலில் வருகிறது. மணிமேகலையில், மணிமேகலை இந் நகரத்துக்கு வந்து தங்கிய செய்தி வருகிறது. அக்காலத்துக்குப் பின் ஆழ்வார்களும், நாயன்மார்களும் வந்து ஆலயங்களை வழிபட்டு அழகிய திருப்பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். பாராயணங்களும், பிரபந்தங்களும், தனிப் பாடல்களும் இந்த நகரத்தைப்பற்றிக் கூறும் செய்திகள் கடல் போலப் பரந்திருக்கின்றன.

'நகரேஷு காஞ்சீ' என்று வடமொழியில் ஒரு வசனம் உண்டு. நகரங்களிலே சிறந்த இது, இறைவன் திருக்கோயிலை நடுவே உடைய தாய்த் தெருக்களெல்லாம் இதழ் அடுக்குகளாக அமையத் தாமரைப் பூவைப் போல விளங்கியதாம். இதைப் பெரும்பாணாற்றுப்படை சொல்கிறது.

வறியவனும் இசைப்புலவனுமாகிய பாணன் ஒருவனுக்கு வேறு ஒரு பாணன், 'கச்சிப்பதியில் உள்ள தொண்டைமான் இளந்திரையனிடம் சென்று பரிசுகள் பலபெற்று வளவாழ்வை அடையலாம் என்று அறிவுறுத்தி, அங்கே போவதற்கு வழி கூறுகிறான். பெரும்பாணாற்றுப் படையின் உட்கருத்து அது தான். இதோ காஞ்சீபுரத்தைப்பற்றிச் சொல்கிறான்:

'' அங்கங்கே உள்ள கடவுளை வாழ்த்தி உங்கள் வாத்தியத்தை வாசித்துக்கொண்டு போங்கள். கச்சிப்பதியை அணுகுவீர்கள் அதை இன்று சின்னக் காஞ்சீபுரம் என்று வழங்கும் விஷ்ணுகாஞ்சி திருமாலடியார்களுக்குச் சிறந்த இடம். முன்னே சொன்ன திருவெஃகணை முதலிய பல திருமால் திருப்பதிகள் இங்கே இருக்கின்றன. ஒரு பாட்டு இத் திருப்பதியிலுள்ள சில திவ்ய தேசங்களைச் சேர்த்துச் சொல்கிறது.

**ஆடவர்கள் எவ்வா றகல்வர் அணி வெஃகாவும்**
**பாடகமும் நீரகமும் பஞ்சரமா- நீடியமால்**
**நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ**
**மன்றார் கலிக்கச்சி மாண்பு.**

திருமிசையாழ்வார் சொன்னதற்காக அவருடன் சென்றவர் திருவெஃகாவிலுள்ள பெருமாள். பிறகு அவர் கூற, மீண்டும் பழைய படியே வந்து பள்ளி கொண்டாராம். அதனால் அவருக்குச் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்ற திருநாமம் உண்டாயிற்று.

பெரிய காஞ்சீபுரந்தான் சிவகாஞ்சி. இங்கே காமாட்சியின் திருக்கோயில் நடுநாயகமாக இருக்கிறது. அந்தக் கோயிலில் சாஸ்தாவின் சந்நிதி ஒன்று உண்டு. கரிகாலன் வடநாட்டுக்குச் சென்றபோது இங்கே வந்து செண்டாயுதம் ஒன்றை இந்தச் சாஸ்தாவுக்குச் சாத்தி எடுத்துச் சென்றானாம். அதைக் கொண்டு இமயமலையை அடித்துத் தன் புலிப்பொறியைப் பொறித்து வந்தானாம். செண்டு என்பது குதிரைச் சவுக்குப் போல உள்ள படைக்கலம். கரிகாலன் செண்டாயு தம் பெற்றுச் சென்றதை ஒரு பழம் பாடல் சொல்கிறது-

**கச்சி வளைக்கைச்சி காமக்கோட்டம் காவல்**
**மெச்சி இனி திருக்கும் மெய்ச்சாத்தான்-கைச்செண்டு**
**கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்**
**செம்பொற் கிரி திரித்த செண்டு.**

ஏகாம்பரேசர் திருக்கோயில் பெரிதும் புகழ் பெற்றது. திருவேகம்பம் என்று தமிழ்ச் செய்யுட்களில் அதன் பெயர் வழங்கும். மாவின் கீழ் எழுந்தருளிய எம்பெருமான் அம்பிகையின் நகிற் சுவடும், வளைச் சுவடும் அணிந்தவர். நான்கு சைவ சமயாசாரியார்களும் அவரைப் பாடியிருக்கிறார்கள். வேறு பல சிவாலயங்களும் இம் மாநகரில் உண்டு. பல்லவர்கள் கட்டிய ஆலயங்களும், சோழர் முதலிய பெருமன்னர்கள் திருப்பணி செய்த திருக்கோயில்களும் பலப் பல.

ஆதிசங்கரர் தங்கித் தவம் புரிந்த இடம் இது. அவர் நிறுவிய காமகோடி பீடம் மிகச் சிறப்பாக இலங்கி வருவது உலகம் அறிந்த செய்தி.

பழங்காலத்தில் புலவர்கள் வைத்துக்கொண்ட பெயர்களில் ஏகாம்பரநாதர் பெயரும், காமாட்சியின் பெயரும் காணப்படுகின்றன. மாமூலனார் என்பவர் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். மாவின் அடியில் இருப்பதனால் கச்சி ஏகம்பருக்கு மாமூலர் என்ற பெயர் வந்தது. அந்தப் பெயரையே அப் புலவருக்கு அவருடைய தாய் தந்தையர் இட்டிருக்கின்றனர். காமக்கணி நப்பசலையார் என்பவர் ஒரு பழைய பெண்புலவர். காமக்கணி அல்லது காமக்கண்ணி என்பது காமாட்சி என்பதன் வேறு உருவமே,

இம் மாநகரின் பெருமையை விரித்து எழுதினால் அது பெரிய நூலே ஆகிவிடும்.

இந்த நகரின் சிறப்பைச் சொல்லும் ஒரு பாட்டைச் சொல்லி இதை முடிக்கிறேன். இந்த உலகம் முழுவதும் ஒரு பெரும் பண்ணை, தேசங்கள் யாவும் வயல்கள். அந்த வயல்களில் கரும்பு போன்றது தொண்டை நாடு. கரும்பின் சாறே அந்நாட்டிலுள்ள பெரிய ஊர்கள் . கருப்பஞ்சாற்றைக் காய்ச்சிய வெல்லக்கட்டியே கச்சியை அடுத்த புறப் பகுதிகள். சிறந்த கற்கண்டுக் கட்டியே சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கச்சித் திருப்பதி' என்பது அந்தப் பாடலின் பொருள்.

**வையகம் எல்லாம் கழனியா, வையகத்துச்**
**செய்யகமே நால் திசையில் தேயங்கள்; செய்யகத்து**
**வான்கரும்பே தொண்டை வள நாடு; வான்கரும்பின்**
**சாறே அந் நாட்டுத் தலையூர்கள்; சாறட்ட**
**கட்டியே கச்சிப் புறம் எல்லாம்; கச்சியுள்**
**தான் ஏற்ற மான சருக்கரை மாமணியே**
**ஆன் ஏற்றான் கச்சி அகம்.**

*- சோமசுந்தர கன்யா வித்யாலயம், காஞ்சி (1904-1964) அறுபதாவது ஆண்டு விழா மலரிலிருந்து*

# ப்ரபோத சிந்தாமணி

ஆயுஷ்மன்

பேச்சு மனிதனுக்கு கடவுள் தந்த வரம். இது பாஷையாக மாறி எத்தனை பாஷைகளாக ப் பிரிந்து உலவுகின்றது. இதில் என் பாஷை ஒசத்தி என்று சண்டை. இந்த பேச்சுக்கு அளவே இல்லாமல் இருக்கிறது. சள சளவென்று பேச்சு, அர்த்தமில்லாமல் பேச்சு, நிஷ்டூரமான பேச்சு, அரசியல்வாதிகளின் ஆரவாரப் பேச்சு, அலங்காரப் பேச்சு சிலருடைய அசட்டுப்பேச்சு இப்படி பயனற்ற பேச்சு அதிகம் இந்த பேச்சுகளில் எதுவும் சாரம் இருப்பதாகத் தெரியவில்லை.

பெண்கள் தங்களுடைய அக்கப்போரை நிறுத்தினாலே பெரிய Women power கிடைக்கும் என்பார் ராஜாஜி. இது உண்மையும் கூட. ஓர் அர்த்தப்பேச்சு இன்னொரு அனர்த்தப்பேச்சையே க் கொடுக்கும். ''ஸத்யாய மித பாஷிணாம் '' என்று ரகுவம்சத்தாரைப் புகழ்வான் காளிதாஸன். உண்மை பேசுவதற்காகவே ஸத்யமாகப் பேசினார்களாம் ராகவர்கள். மனிதனை விலங்குகளிடமிருந்து பிரித்துக் காட்டுவது இந்த பேச்சு. இது இனியதாக இருக்கவேண்டியது நம் பொறுப்பு

**''இனிய உளவாக இன்னாது கூறல்**
**கனியிருப்பக் காய கவர்ந்தற்று''**

இது எல்லாரும் அறிந்த குறள்.

இதன்படி மனிதன் நடக்கிறானா? இல்லை ஏதேதோ ஆராய்ச்சிகள் விமர்சங்கள், ப்ரதி விமர்சங்கள். மனிதன் சந்த்ரமண்டலம் செவ்வாய் மண்டலம். அன்டார்டிகா இஅவை பற்றி ஆய்வுகள் நடத்துவான். மனிதனாக இருக்க மாட்டான் மனிதத்தன்மையுடன் இருக்க முயல்வதே இல்லை. நற்பண்புகள் அனைத்தையும் தொலைத்து மாயையில் உழன்று பச்சாத்தாபம் அடைபவன் மனிதன். இவனை என்னவென்று சொல்வது? இதற்கு நல்ல சிந்தனை வேண்டும் நல்ல சிந்தனை நல்ல வாக்கைக் கொடுக்கும். நல்ல வாக்கு நல்லசெயல்களைச் செய்யும். அடிப்படையையே கோட்டை விட்டுவிட்டான் மனிதன்.

வாக்கும் அர்த்தமும் சித்திப்பதற்காக வாக்கும் அர்த்தமும்மாக உள்ள பார்வதீபரமேஸ்வரனை துதிக்கிறேன் என்று காளிதாசன் கூறுவான். இந்த பேச்சு நன்றாக இருக்க ''ஜிஹ்வா மே மதுமத்தமா''(என் நாவில் தேன்சுவை இருக்கட்டும் ) என்றும் ''மது மனிஷ்யே மது ஜனிஷ்யே மது வக்ஷ்யாமி மது வதிஷ்யாமி'' என்றும் வேதம் கோஷமிடும்.

நாமும் இனிய அன்பான பேச்சால் இப்பூமியை ராம ராஜ்யமாக மாற்றுவோம் , மனிதர்களாக இருப்போம்.

**''லக்ஷ்மீர்வஸதி ஜிஹ்வாக்ரே ஜிஹ்வாக்ரே மித்ரபாந்தவா:**
**ஜிஹ்வாக்ரே பந்தனம் ப்ராப்தம் ஜிஹ்வாக்ரே மரணம் த்ருவம்''**

என்று ஸுபாஷிதம் கூறும். நாவில் திருமகள் இருப்பதால் எச்சரிக்கையுடன் பேசுவோம் அன்பாக பேசுவோம். வீண் பேச்சுகளைத் தவிர்ப்போம்.



★ நம்முடைய தமிழ்நாடு என்பது ஒரு தெய்வீகமான ஒரு பக்தியை, மேன்மையான கலாசாரத்தை, வளர்த்த, வளர்த்துக் கொண்டிருக்கக்கூடிய, ஒரு ப்ரதேசம்.

★ நம்முடைய ஸனாதன தர்மம் என்பது, நீண்ட நிரந்தர உண்மை. நேற்றைக்கும் இருந்தது, இன்றைக்கும் இருக்கிறது, நாளைக்கும் இருக்கப் போகிறது.

★ நம்முடைய நாகரீகம் என்பது உயர்ந்தது என்பதிலே சந்தேகமில்லை. ஆனால், அதே சமயத்திலே, அதை நாம் உணர்ந்திருக்கிறோமா என்பதிலே சந்தேஹமிருக்கிறது.

★ ஆஸ்திக்யம் என்பது சாஸ்த்ரங்களை நம்பி வாழ்வது, சாஸ்த்ரங்களை ஒத்துக் கொண்டு வாழ்வது, சாஸ்த்ரத்துனுடைய வழிபடி, வழி நடப்பது. அந்த சாஸ்த்ரங்களை நமக்கு சொல்லித் தருவது வேதங்கள்.

★ எந்த வழிபாடாக இருந்தாலும், இந்து ஸமயத்தை பொறுத்த வரையிலே, அன்புதான் மிகுதியாக இருக்க வேண்டும். அதனுடைய பகுதிதான் மற்றதெல்லாம்.

# பீஷ்மஸ்தவராஜம் - 2

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

अनाध्यन्तम् परम् ब्रह्म न देवो नार्ष्यो विदुः ।

एको यम् वेद भगवान् धाता नारायणो हरी ।। ६

**அனாத்யந்தம் பரம் ப்ரம்ம ந தேவோ நார்ஷ்யோ விது;**

**ஏகோ யம் வேத பகவான் தாதா நாராயணோ ஹரி: 6**

*ஆதியுமந்தமும் பரப்ரம்மமும் அவன். அவனை தேவர்களும், ரிஷிகளும் அறியார். ஒருவன் பகவான் எல்லாமளிப்பவன் நாராயணன் என்று அறிந்து கொள்ளுங்கள். (அவனை நாராயணனே அறிவான்.)*

नारायणात् रिषिगणास्तथा सिदिद महोरगाः ।

देवा देवर्ष्यस् चैव यम् विदुः परम् अव्ययम् ।। ७

**நாராயணாத் ரிஷிகணாஸ்ததா ஸித்தி மஹோரகா:**

**தேவா தேவர்ஷயச்சைவ யம் விது: பரம அவ்யயம் || 7**

*நாராயணனிடமிருந்தே ரிஷிக்கூட்டங்கள் ஸித்தர்கள் பாம்புகள் தேவர்கள் தேவரிஷிகள் அனைவரும் அவனை அழிவில்லா பரம்பொருள் என்று அறிந்தார்கள்.*

यस्मिन् विश्वानि भूतानि तिष्टन्ति विशन्ति

गुणभूतानि भूतेश सूत्रे मणिगणा इव ।। ८

**யஸ்மின் விஸ்வானி பூதானி திஷ்டந்தி விஸந்தி ச**

**குணபூதானி பூதேச ஸூத்ரே மணிகணா இவ || 8**

*யாரிடத்தில் உலகமும் உயிரினங்களும் நிற்கின்றனவோ அவனிடத்திலேயே லயமடைகின்றனவோ அமுக்குண உயிரினங்கள் தலைவனான அவனிடத்தில் மாலையில் மணிகள் போல் உள்ளன.*

यस्मिन् नित्ये ततो तन्तौ ध्रुडे स्रगिव तिष्टति ।

सदसत् ग्रथितम् विश्वम् विश्वाग्ङो विस्वकर्मणि ।। १०

**யஸ்மின் நித்யே ததோ தந்தௌ த்ருடே ஸ்ரகிவ திஷ்டதி**

**ஸதஸத் க்ரதிதம் விஸ்வம் விஸ்வாங்கே விஸ்வகர்மணி || 9**

*யாரிடத்தில் நித்யமாக வலிமையுடன் கட்டப்பட்ட மாலையில் முக்குண உயிரினங்கள் இவ்வுலகம் உலகின் பகுதிகள் உலகின் செயல்பாடுகள் பூக்கள் போல் கட்டப்பட்டுள்ளனவோ அந்த பகவான் இவன்.*

हरिम् सहस्रशिरसम् शहस्रचरणेक्षणम् ।

सहस्रबाहु मुकुटम् सहस्रवदनोज्वलम्  ।। १०

**ஹரிம் ஸஹஸ்ர சிரஸம் ஸஹஸ்ரசர்ணேக்ஷணம்**

**ஸஹஸ்ர பாஹு முகுடம் ஸஹஸ்ரவதனோஜ்வலம் || 10**

*ஆயிரம் தலைகள், ஆயிரம் கால்கள், கண்கள், ஆயிரம் கைகள், மகுடங்கள், ஆயிரம் ஒளிரும் வதனங்கள் உள்ள ஹரியே வாஸுதேவன்.*

*(தொடரும்)*


"ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.
1.வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2.ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3.ஆஹ்னிககாண்டம் உத்தரபாகம் ,
4.ஆசௌசகாண்டம், 5.ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6.ஸ்ராத்தகாண்டம் உத்தரபாகம்,
7.திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்தகாண்டமும் என்ற 7 பாகங்கள்சேர்த்து மிகக்குறைந்த விலையில்
கிடைக்கப்பெறுகின்றது.ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500
கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்
9600543996,7904244054, 9003845456,9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும்**
**ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -10

பி. ஆர். கண்ணன்

## சுக்ராசாரியார் வரலாறு



சுக்ராசாரியார் ஒரு சமயம் பரமேஸ்வரனை நோக்கி 1000 வருஷங்கள் தலைகீழாக கனல்கக்கும் உமியின் மீது இருந்து கடுந்தபஸ் செய்து, ஸஞ்ஜீவனி மந்திரத்தைப் பெற்றார். அப்போது ஒருசமயம் தேவர்களால் விரட்டப்பட்ட அசுரர்கள் சுக்ராசாரியார் தாயார், பிருகு மஹரிஷியின் பத்தினியிடம் சரண் புகுந்தனர். தேவர்களை நித்திராவசம் செய்தாள் அவள். இந்திரன் விஷ்ணுவின் தேகத்திற்குள் புகுந்தார். தன் தபோபலத்தினால் விஷ்ணுவுடன் இந்திரனை விழுங்குவேன் என்று முழங்கிய பிருகுபத்தினியை, விஷ்ணு சக்ரத்தினால் சிரச்சேதம் செய்தார். பிருகு ரிஷி வந்து, பத்தினியை உயிர்ப்பித்து, விஷ்ணுவை பல ஜன்மாக்கள் பூமியில் எடுத்து கஷ்டப்படும்படி சபித்தார். லோகக்ஷேமத்திற்காக விஷ்ணு பல அவதாரங்கள் எடுக்க இச்சாபம் ஏதுவாயிற்று.

## கிருஷ்ண சரித்திரம்

அந்த அவதாரங்களில் முக்கியமான கிருஷ்ணவதாரத்தின் முக்கிய கட்டங்களை வியாஸர் இப்போது சொன்னார். வசுதேவர், தேவகியின் ஆறு புத்திரர்கள் கம்ஸன் கையினால் துர்மரணம் அடையச்செய்தாரே நாரதர், பெரிய அதர்மம் என்று ஜனமேஜயன் கேட்க, வியாஸர் விளக்கினார்: ‘அந்த ஆறு பேரும் பிரம்மா, ஹிரண்யகசிபு இருவரின் சாபத்திற்கு ஆளாகியிருந்தனர். தேவகாரியத்திற்காக அச்சாபத்தை நிறைவேற்றும்படி செய்தார் நாரதர். காரணமில்லாமல் காரியமில்லை‘ என்றார். கிருஷ்ணர் எட்டு பட்டராணிகளை விவாகம் செய்ததைச் சொன்னார். ருக்மிணிக்கு பிரத்யும்னன் பிறந்தான். பிறந்தவுடனேயே சம்பராசுரனால் களவாடப்பட்டான் குழந்தை. துக்கம் தாங்காத கிருஷ்ணர் தேவியிடம் அழுது முறையிட்டார்: ‘எல்லாம் உன் மாயையே. இல்லாவிட்டால் அரண்மனையில் பிரசவ அறையிலிருந்து குழந்தை எவ்வாறு காணாமல்போகமுடியும். முன்னால் நாராயண ரிஷியாக உன் பீஜாக்ஷரங்களினால் பல வருஷங்கள் உன்னை உபாஸித்தேனே.

ஸம்ஸாரத்தினால் பீடிக்கப்பட்ட எல்லோருக்கும் நீ தானே கதி; கருணை காட்டவும்' என்று. தேவி தரிசனம் தந்து, உன் புத்திரன் 16வது வயதில் சம்பராசுரனை வதைத்து திரும்புவான் என்று அனுக்ரகித்தாள்.

இதன் பின்னர் கிருஷ்ணபத்தினி ஜாம்பவதி புத்திரப்ராப்திக்காக ஆசைப்பட்டபோது, கிருஷ்ணர் சிறந்த சிவபக்தரான உபமன்யு மஹரிஷியிடம் சிவதீக்ஷை, சிவஸஹஸ்ரநாம உபதேசம் எல்லாம் பெற்று, சிவனை நோக்கி கடுந்தபஸ் செய்தார். முதல் மாதம் பழ ஆகாரம், 2 வது மாதம் ஜலாகாரம், ஒற்றைக்காலில் தபஸ், 3வது மாதத்திலிருந்து வாயுபக்ஷணம், கால் கட்டைவிரலில் நின்று தபஸ். 6வது மாதம் சிவபார்வதி தரிசனம் தந்தனர். கிருஷ்ணர் தன் ஸ்தோத்திரத்தில், யார் தங்களை ஆராதித்து, தரிசித்து, துச்சமான பலனைக்கேட்கும் மூடராவர், தாங்கள் முக்தியையே தரவல்லவராயிற்றே; ஆனாலும் என் நிலைமை தங்களிடம் புத்திரபாக்கியத்தைத்தான் கேட்க வேண்டியிருக்கிறது என்றார். சிவன் சிரித்து அனுக்ரகித்து, மேலும் 16050 பத்தினிகள் வரப்போகிறார்கள்; எல்லோருக்கும் பத்து புத்திரர்கள் உண்டாவர் என்றும், எல்லா ஸம்பத்துகளையும் அருளினார். ஜனமேஜயன் வியாஸரை கிருஷ்ணர் ஜகத்பதியாக இருந்து கொண்டு ஏன் தபஸ் செய்து சிவனிடம் வரம் பெற்றார் என்று கேட்டார். வியாஸர், அதுதான் மனுஷ்யலீலை, மனுஷ்யர்கள் எவ்வாறு பக்தி பண்ண வேண்டும் என்பதைத் தானே செய்துகாட்டினார் என்றார்.

(வளரும்)

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -11

## மஹிஷாஸுர மர்த்தனம்

கச்யபரின் பத்தினிகளுள் ஒருத்தி தனு என்பவள்; அவளுக்குப் பிறந்தவர்கள் தானவர்கள்; அசுரர்களுக்கு சமமானவர். தனுவின் புத்திரர்கள் ரம்பன், கரம்பன் என்ற இருவர். கரம்பன் ஜலத்தில் தபஸ் செய்தபோது, இந்திரன் முதலையாக வந்து அவனைக் கொன்றார். கரம்பனின் மறைவால் உண்டான துக்கத்தினால், ரம்பன் தபஸின்போது, தன் சிரஸைக் கொய்ய முற்பட்டபோது, அக்னி பகவான் தடுத்து, உனக்கு பலசாலியான புத்திரன், த்ரிலோகாதிபதி பிறப்பான் என்று அனுக்ரஹித்தார். பின்னர், ரம்பன் மரணமடைந்தபோது, அவனுக்கும் ஒரு மஹிஷிக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பினால், அவனும், மஹிஷியும் இருந்த சிதையிலிருந்து, மஹிஷாஸுரன் தோன்றினான். கூடவே, ரக்தபீஜனும் (அவன் ரம்பனே தான்) உண்டானான். மஹிஷாஸுரன் ராஜாவாகி, தபஸினால் பிரம்மாவிடம் வரன்களைப்பெற்று, மதம் பிடித்து, இந்திரனிடம் தூது அனுப்பவே, தூதன் இந்திரனின் கடும் சொற்களை

மஹிஷனிடம் உரைக்க, மஹிஷன் யுத்தத்திற்குக் கிளம்பினான். இந்திரன் குரு பிருஹஸ்பதியிடம் யோசனை கேட்கவே, அவர் வேதாந்த உபதேசம் செய்தார்.

இந்திரனுக்கும், மஹிஷனுக்கும் நடந்த கடும் யுத்தத்தில், இந்திரன் பிரார்த்தனையின்பேரில், பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் கலந்துகொண்டனர். மூவரும் தோற்றுப்போய் ஓட்டமெடுத்தனர். இது மஹிஷனின் தபோபலம். பிறகு, தேவர்கள் தோற்றுப்போய், மேருமலையின் குகைகளில் ஒளிந்தனர். வெகுநாள் கழித்து, தேவர்களின் வேண்டுகோளின்பேரில், பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் யோசித்து, ஒரு ஸ்திரீயினாலேயே மஹிஷன் மரணமடையவேண்டும், ஆனால் உமா, லக்ஷ்மி, ஸரஸ்வதி இவர்களால் முடியாது, ஆகையால் எல்லா தேவர்களின் தேஜஸ்ஸினால் உண்டாகும் ஸ்திரீயினாலேயே முடியும் என்று தீர்மானித்தனர். உடனேயே பிரம்மாவின் முகத்திலிருந்து சோபையுடன் ரத்தவர்ணமும், சிவன் சரீரத்திலிருந்து வெண்மையும், விஷ்ணுவிடமிருந்து கருப்பும், மற்ற தேவர்களுடைய தேஜஸ்ஸும் ஒன்றுசேர்ந்து ஒரு சுந்தர ஸ்திரீ ஆங்கு தோன்றினாள். **'அஷ்டாதஸபுஜா தேவீ ஸஹஸ்ரபுஜமண்டிதா । ஸம்பூதா ஸுரநாஸய தேஜோராஸிஸமுத்பவா ।।'** தேவி ஒருசமயம் பார்த்தால் 18 கைகளுடனும், மற்றொரு சமயம் 1000 கைகளுடனும், ஒளிமயமாகத் திகழ்ந்தாள். தேவர்கள் களிப்பு மிகுந்து, ஆபரணங்களையும், மாலைகளையும், ஆயுதங்களையும் தேவிக்கு ஸமர்ப்பித்தனர். சிவன் திரிசூலமும், விஷ்ணு சக்கிரமும், பிரம்மா கமண்டலுவும், இந்திரன் வஜ்ரமும், அக்னி சக்த்யாயுதமும் (வேல்), வாயுவானவர் வில்லும், அம்பும், யமன் தண்டமும், காலன் வாளும், ஹிமவான் சிம்மவாகனமும் அளித்தனர். தேவர்கள் வெகுவாக தேவியை ஸ்தோத்திரித்தனர்.

**ப்ருதிவ்யாம் யா ஸ்திதா ப்ருத்வ்யா ந ஜ்ஞாதா ப்ருதிவீ ச யா ।**
**அந்தஸ்திதா யமயதி வந்தே தாமீஸ்வரீம் பராம் ।।**
**மாயாயாம் யா ஸ்திதா ஜ்ஞாதா மாயயா ந ச தாமஜாம் ।**
**அந்தஸ்திதா ப்ரேரயதி ப்ரேரயித்ரீம் நும ஸிவாம் ।।**

'பூமியின் உள்ளே இருந்துகொண்டு, அதனை அடக்கியாள்கிறாய், ஆனால் இது பூமிக்குத் தெரியாது. மாயையின் உள்ளே இருந்துகொண்டு, மாயையை செயல்படுத்துகிறாய், ஆனால் மாயை அதை அறியாள். ஆதியற்ற, அந்த பரமேஸ்வரியை நமஸ்கரிக்கிறோம்.' என்று.

தேவியின் பெருங்சிரிப்பைக் கேட்டு ஆச்சரியமுற்ற மஹிஷன், தூதர்கள் வாயிலாக தேவியின் ஸௌந்தரியத்தைப்பற்றிச் செவியுற்று, மையல் கொண்டு, மந்திரியை அனுப்பினான். தேவியின் துணுக்கான பதிலைக்கேட்டு, மஹிஷனின் பராக்கிரமத்தை

*எடுத்துரைத்த மந்திரிக்கு, தேவி கூறியது: 'விதி விபரீதமாகும்போது, புல்லும் வஜ்ஜிரம்போன்று ஆகிவிடும். விஷ்ணு முதலிய தேவர்கள் முன்பு மஹிஷனிடம் தோற்றதற்குக் காரணம், பிரம்மா கொடுத்திருந்த வரனை மதிக்கவே.' மஹிஷனுக்கு பலவிதமான தைரியம் கலந்த, சாதுரியமான யோசனைகளை பல மந்திரிகள் சபையில் கூறினர். முதலில் தாம்ரன் யுத்தத்திற்கு தேவியிடம் சென்று ஓட்டமெடுத்தான். பாஷ்கலனும், துர்முகனும் கடும் யுத்தம் செய்து மடிந்தனர். பின்னர் சிக்ஷுரனும், தாம்ரனும் போரில் மாண்டனர். அஸிலோமா என்ற அசுரன் தேவிக்கு தயையின் பெருமையை எடுத்துரைத்தான். தேவி, மஹிஷன் ஏன் பாதாளம் செல்லாமலிருக்கிறான் என்று கேட்டு அவனைக் கொன்றாள். அசுரர்களின் இடம் பாதாளம், தேவர்களுக்கு ஸ்வர்க்கம், மனிதர்களுக்கு பூமி என்பது தேவியின் இயற்கையான நியதி. அசுரர்கள் தங்கள் நிலையை மீறி தேவர்களுக்கு துன்பமளித்து, ஸ்வர்க்கத்தைக் கைப்பற்றுவதே பல முக்கிய தேவாசுர யுத்தங்களுக்குக் காரணம். பின்னர் மஹிஷாசுரன் மன்மதனைப்போன்ற அழகிய ரூபமெடுத்து, யுத்தபூமியில் வந்து, காமம் மிகுந்து, 'நான் உன்னை சரணடைந்தேன். ரக்ஷி. ஸ்திரீவதம், குழந்தைவதம், பிராம்மணவதம் மாபெரும் குற்றமாகும். உன்னை வலுக்கட்டாயமாக என் அரண்மனைக்கு இழுத்துச் செல்வேன்' என்று பலவாறாகப் பிதற்றினான். தேவி சொன்னாள்:*

***அரூபாயாஸ்ச மே ரூபம் அஜந்மாயாஸ்ச ஜந்மச ந ஸுராணாம் ரக்ஷணார்த்தாய வித்தி தைத்ய விநிஸ்சிதம் ।।*** *'உருவமில்லாத நான் உருவமெடுப்பதும், பிறப்பற்ற நான் ஜன்மமெடுப்பதும் தேவர்களின் (ஸாதுக்களின்) ரக்ஷணத்திற்காகவே என்று நிச்சயமாக உணர்வாயாக, அசுரனே' என்று. அசுரனும் பலப்பல ரூபங்கள் எடுத்து போரிட்டான். தேவியின் கையினால் சிரச்சேதமடைந்தான். தேவர்கள் தேவியை துதித்தனர். 'இந்த பளுவான பூமியை கூர்மமும், நாகமும் தாங்குவது எவ்வாறு, நீதானே தாங்குகிறாய். பிரம்மனும், விஷ்ணுவும், சிவனும் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்காரம் எவ்வாறு செய்யமுடியும், நீ தானே எல்லாவற்றிற்கும் காரணம். உன் கருணையை எப்படி வர்ணிப்பது. அதீத தயையினால் நீ அசுரப்படையினர்மீது உன் கையினாலேயே ஆயுதப்பிரயோகம் செய்து மாய்த்தாய், இல்லாவிடில் விடிவேயில்லாத நரகத்தில் அவர்கள் உழல்வரே, இப்போது ஸ்வர்க்கமன்றோ எய்தனர்.' என்று. இதே போன்ற பக்தி ததும்பும் ஸ்லோகம் தேவி மாஹாத்மியத்திலும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஸ்ரீ நாராயண பட்டத்திரியின் ஸ்ரீபாதஸப்ததியில் முதல் ஸ்லோகத்திலேயே தேவியின் கடுமையும் தயையும் ஒருங்கே காணப்படுவதைப் பார்க்கலாம்.*

*(வளரும்)*

# ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவர்களின் 27வது வார்ஷிக ஆராதனை



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதியாக விளங்கி பக்தர்களால் நடமாடும் தெய்வம் என்று போற்றப்பட்ட ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர சரஸ்வதி மஹாஸ்வாமிகள் அவர்களின் 27வது வார்ஷிக ஆராதனை 10.01.2021 ஞாயிறன்று ஸ்ரீமடத்து ப்ருந்தாவன சன்னதியில் வெகு விமரிசையாக நடந்தேறியது. ஆராதனையையொட்டி 8ம் தேதி முதல் 3 நாளைக்கு சதுர்வேத பாராயணம் நடந்தது. இரண்டு நாட்களுக்கு வித்வத் சபை நடந்தது. 3 நாட்களும் மாலையில் கர்னாடக இசைக்கச்சேரிகள் நடந்தன. ஆராதனை தினமான 10.01.2021 அன்று காலை முதல் ப்ருந்தாவனத்தில் விசேஷ அபிஷேக, அலங்கார ஆராதனைகள் நடந்தன. மஹன்யாஸ பூர்வக ஏகாதச ருத்ரஜபமும், ஹோமங்களும் நடைபெற்றன. ருத்ர ஜப கலசங்கள் ப்ருந்தாவனத்தை ப்ரதக்ஷிணமாக ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு ஸ்ரீ பெரியவாள் அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டு மஹாதீபாராதனை செய்யப்பட்டது. திருமலை, திருப்பதி தேவஸ்தானத்தின் கூடுதல் நிர்வாக அதிகாரி ஸ்ரீ தர்மா ரெட்டி தம்பதியாக வந்து ஸ்ரீ வெங்கடாசலபதி ப்ரஸாதம் வழங்கினார்கள். அதே போல் தஞ்சாவூர் பங்காரு காமாக்ஷி, காஞ்சி காமாக்ஷி, ஏகாம்பரேஸ்வரர் கோவில் ப்ரஸாதங்கள் வழங்கப்பட்டன.

முன்னதாக ஸ்ரீ பெரியவாள் அவர்கள் ஆராதனைக்காக ப்ரத்யேகமாக நியமிக்கப்பட்டிருந்த 32 வேத விற்பன்னர்களுக்கு வஸ்திரம் வழங்கினார்கள். இந்த ஆராதனை ப்ராம்மணாள் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோவில் குளத்தில் ஸ்நானம் செய்து அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பசுமாடு, மங்கள வாத்யம், கௌரி காளை, குடை, தீவட்டி போன்ற மரியாதைகளோடு ஊர்வலமாக ஸ்ரீமடத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

பிறகு சுமார் 50 இளம் இசைக்கலைஞர்கள் கோஷ்டி கானமாக பஞ்சரத்ன கீர்த்தனைகளை பாடினார்கள்.

சுமார் 1.30 மணியளவில் தீர்த்த நாராயண பூஜை நடந்து ஆராதனை ப்ராம்மணர்களுக்கு தகுந்த மரியாதை/ஸம்பாவனை முதலியன வழங்கப்பட்டன. பிறகு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வந்திருந்த பக்தர்களுக்கு ஆராதனை ப்ரஸாதமாக அக்ஷதை வழங்கினார்கள்.

முன்னதாக வேத சதஸில் பங்கேற்ற பண்டிதர்களுக்கும் வேத பாராயணத்தில் பங்கேற்ற வைதீகர்களுக்கும் ஸம்பாவனை வழங்கப்பட்டது.

ஆராதனை அன்று மாலை 6 மணி அளவில் மாண்டலின் இசைக்கலைஞர் திரு. U.ராஜேஷ் மற்றும் ட்ரம்ஸ் இசைக்கலைஞர் திரு. சிவமணி அவர்களின் சேர்ந்திசை நடைபெற்றது. சுமார் 7 மணி அளவில் அலங்கரிக்கப்பட்ட ஸ்வர்ண ரதத்தில் ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் திருவுருவச் சிலை வைத்து ப்ருந்தாவன வளாகத்தில் ஊர்வலம் நடைபெற்றது.

தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையை முன்னிட்டு பக்தர்கள் வருகை வரமுறை செய்யப்பட்டது. இணைய வழி முன்பதிவு மூலம் பக்தர்கள் ஸ்ரீமடத்திற்குள் அனுமதிக்கப் பட்டார்கள். நேரடியாக வந்திருந்தவர்கள் பதிவு செய்யப்பட்டு பிறகு அனுமதிக்கப்பட்டார்கள். அரசாங்கம் அறிவித்திருந்த சுகாதார நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. பக்தர்கள் காலை 7 மணி முதல் ஆராதனை முடியும் வரை வரிசையாக ஸ்ரீ ப்ருந்தாவனம் தர்சனம் செய்ய ஏற்பாடாகியிருந்தது. வரிசையில் வந்து தர்சனம் செய்துவிட்டு வெளியேறும் பக்தர்களுக்கு வெளிவாசல் அருகே அன்னதானமும் வழங்கப்பட்டது. காலை முதல் மதியம் 3 மணி வரை இடைவிடாமல் வந்திருந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. சுமார் 2000 பக்தர்கள் (1200 பேர் இணையவழி மூலம் 800 பேர் நேரடியாகவும்) வந்திருந்து வரிசையில் காத்திருந்து தர்சனம் செய்தார்கள். எங்கும் கூட்டம் சேராதபடி ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தது.

## ஸனாதன தர்மப் புதிர்கள் ஜனவரி விடைகள்

1. திருநாவுக்கரசர்
2. புவனி விடங்கர்
3. தொல்காப்பியம்
4. த்ரயம்பகம்
5. குருடர்கள் பலர் யானையை விளக்குவது
6. ஹயக்ரீவர்
7. மூர்க்க நாயனார்
8. மேதாதிதி
9. ஸோமலதை
10. வடமொழி இலக்கணத்தில் முதல் 14 சூத்ரங்கள்

# ஸ்ரீமடம் முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

காஞ்சிபுரம் ஸ்ரீமடத்தில் தொடர்ந்து தனுர் மாத பூஜையை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் நடத்தி வந்தார்கள்.



*21.12.2020* - அன்று மகராயண புண்ய கால பூஜையை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் செய்தார்கள்.

*01.01.2021* - அன்று புதுதில்லியில் நடைபெற்ற " Making of a Hindu Patriot' & Background of Gandhiji's Hind Swaraj என்ற புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் வீடியோ கான்பரன்ஸிங் மூலம் பங்கேற்று அருளாசி வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் தலைவர் திரு மோகன் பகவத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*01.01.2021* - அன்று சென்னை க்ருஷ்ண காண சபாவில் நடைபெற்ற நாம சங்கீர்த்தன விழாவில் வீடியோ கான்பரன்ஸிங் மூலம் பங்கேற்று ஆசி வழங்கினார்கள்.

*02.01.2021*- அன்று வெளிநாடு வாழ் பக்தர்களுக்கு வெப் டெலிகாஸ்ட் மூலம் அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள்.

*05.01.2021* - அன்று ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மா அனுக்ரஹா ட்ரஸ்ட் சார்பில் நடைபெற்ற வேத வித்வான்களுக்கு விருதளிக்கும் நிகழ்ச்சி ஸ்ரீமடத்தில் நடைபெற்றது. அதில் பல்வேறு வேத வித்வான்களுக்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் திருக்கரங்களால் விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

*10.01.2021* - ஸ்ரீமஹாஸ்வாமிகளின் 27வது ஆராதனை மஹோத்ஸவம்

*14.01.2021* - மகர சங்கராந்தி பூஜை ஸ்ரீமடத்தில் நடைபெற்றது.

*15.01.2021* - மாட்டுப் பொங்கல் நிகழ்ச்சி - ஸ்ரீமடம் வளாகத்திலுள்ள பசுக்களுக்கு நன்கு அலங்கரிக்கப்பட்டு பூஜைகள் நடைபெற்றன. ஸ்ரீ ஆசார்யாள் கோமாதாவிற்கு தீபாராதனை காட்டி வணங்கினார்கள். பின்னர் ஸ்ரீமடம் கோசாலைகள் அமைந்திருக்கும் ஏனாத்தூர் மற்றும் வேடல் ஆகிய இடங்களிலும் மாட்டுப்பொங்கல் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

*17.01.2021* - காணும் பொங்கலை முன்னிட்டு காஞ்சிபுரம் அருகேயுள்ள கீழம்பி எனும் கிராமத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் ஸ்ரீ ஆசார்யாள் பங்கேற்று அனுக்ரஹம் வழங்கினார்கள். அதற்கு முன்னதாக கீழம்பியில் வயல்வெளிக்கு நடுவில் அமைந்திருக்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 60வது ஆசார்யாளான அத்வைதாத்மப்ரகாசேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானத்திற்கு தீபாராதனை காண்பித்து ப்ரார்த்தனை செய்தார்கள். சுமார் 13வது நூற்றாண்டில் அம்பிகாபுரம் என வழங்கப்பட்ட இந்த கீழம்பி கிராமத்தை தானமாக சோழப்பேரரரசர் விஜயகாந்த சோழன் அப்போதிருந்த சங்கராச்சார்ய ஸ்வாமிகளுக்கு வழங்கிய சாசனம் அங்கு காணப்படுகிறது.

*18.01.2021* - காஞ்சிபுரம் அருகேயுள்ள வேடலில் அமைந்துள்ள ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் பாரம்பர்ய கலாச்சார மையத்திற்கு விஜயம். நுழைவுவாயிலில் அமைந்துள்ள ப்ரம்மாண்ட சிவன் சிலை, நந்தி சிலை, நக்ஷத்ர வனம், மிகப்பெரிய நாட்டுப்பசு கோசாலை, வேத பாடசாலை, கோக்ராஸம் தயாரிக்கும் இடம், ம்யூஸியம், ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி அர்த்த சாஸ்த்ர பாடசாலை ஆகியவை ஒருங்கே அமைந்திருப்பது இந்த மையத்தின் சிறப்பம்சமாகும்.

இங்கு அமைந்துள்ள சிவ த்யான கேந்த்ரத்தில் காமாக்ஷி விலாசம் - online series- ன் நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள்.

*பின்னர் வளாகத்தில் அமைந்துள்ள கோசாலைக்கு விஜயம் செய்த ஸ்ரீ ஸ்வாமிகள் அங்குள்ள சுமார் 130 நாட்டு மாடுகளை பார்வையிட்டார்கள். இங்கு கறக்கப்பட்டும் பால் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வரர் பூஜைக்கும் ஸ்ரீ மஹாபெரியவாள் மற்றும் ஸ்ரீ பெரியவாள் ப்ருந்தாவன அபிஷேகத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இங்கு தயாரிக்கப்படும் விராட்டிகள் பல்வேறு ஹோமங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது.*

*பின்னர் அர்த்தசாஸ்த்ர பாடசாலைக்கு சென்றார்கள். இங்கு 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களது கல்லூரிப் படிப்பையும் அதனோடு வைதீக சனாதன தர்மத்தையும் ஒருசேர பயிலும் வாய்ப்பு பெற்று வருகிறார்கள்.*

*29.01.2021 - காஞ்சி காமகோடி சேவா பவுண்டேஷன் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் ஸ்ரீ க.கீ.கண்ணன் அவர்கள் தொகுத்த ''சங்கர ஸ்தோத்ர மகரந்தம்'' என்ற நூலை காணொளி காட்சி மூலம் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வெளியிட்டு அனுக்ரஹித்தார்கள்.*

*30.01.2021 - திருவள்ளூர் மாவட்டம் கண்டிகையில் நடைபெற்ற பூ கட்டுவோர் மற்றும் அருள்வாக்கு பேரவை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆசி வழங்கினார்கள். நிகழ்ச்சியின் அனுக்ரஹ பாஷணத்தில் திலகதாரணம், இந்து கலாச்சாரத்தைப் பற்றி கூறினார்கள். ஒவ்வொருவரும் திருமண், விபூதி, சந்தனம், குங்குமம் அணிந்து கொண்டு, கிராமத்து மக்கள் பிரச்சாரம் செய்து, வரும் சந்ததியர்களுக்கு கற்றுக் கொடுத்து, நாம் நமது சனாதன தர்மத்தை கடைபிடிக்க வேண்டும் என்றும் பூ மாலையை பல நிறங்களில் உள்ள பூக்களால் அழகாகக் கட்டி, அதன் மூலம் இறைவனுக்கு படைக்க உதவும் பூ கட்டும் மக்களைப் பாராட்டி கூறுகையில், ‘நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாமலை தொடுத்தார்கள், நீங்கள் பூமாலை தொடுக்கின்றீர்கள் ‘ என்று அவர்கள் செய்யும் தொழிலை, அதன் முக்கியத்துவத்தை கூறினார்கள்.*

*31.01.2021 - ஸ்ரீமடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஸ்ரீ சங்கரா சமுதாயக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் ஸ்ரீ ஆசார்யாள் அவர்கள் கூடுதல் வகுப்பறைகள், இணையவழி கல்வி நிகழ்ச்சிகள் ஆகியவற்றை துவக்கி வைத்து ஆசியளித்தார்கள். இந்நிகழ்ச்சியில் சென்னை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியை கௌரி அவர்கள் கலந்து கொண்டார்கள்.*

*01.02.2021 முதல் 07.02.2021 வரை - பகவான் பதஞ்சலி இயற்றிய வ்யாகரண மஹாபாஷ்யத்தின் ஸம்பூர்ண பாராயண நிகழ்ச்சி முதன்முறையாக தென்னிந்தியாவில் ஸ்ரீமடத்தில் நடைபெறுகிறது.*

*01.02.2021 - அயோத்தி ராமஜன்ம பூமி நிர்மாணத்திற்கு ஸ்ரீமடம் மூலம் நன்கொடை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*அயோத்தியில்ஸ்ரீ ராமபிரானுக்கு எழுப்பப் பட்டுக் கொண்டிருக்கும் ப்ரும்மாண்டமான கோவிலுக்கு நிதி திரட்டும் பொருட்டும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் 01.02.2021 திங்களன்று ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியானது காலை 7 மணிக்கு கணபதி ஹோமத்துடன் தொடங்கி ஸ்ரீ ராம ஷடாக்ஷரி ஹோமம் நடைபெற்று மதியம் 1.00மணி அளவில் பூர்ணாஹுதி நடைபெற்றது. ஸ்ரீ ராமபிரான் விக்ரஹத்திற்கு கலசாபிஷேகமும் ஸ்ரீமடம் அனுக்ஞ கணபதிக்கு கலசாபிஷேகமும் செய்து அலங்கார ஆராதனை, தீபாராதனை செய்யப்பட்டது.*

*பொதுமக்கள் காணிக்கை செலுத்துவதற்கு ஏதுவாக இரண்டு பெரிய உண்டியல்கள் தயாராக இருந்தன. காலை 8.00 மணி முதல் மாலை வரை பொதுமக்கள் வரிசையாக வந்து அவர்களது காணிக்கைகளை செலுத்தினார்கள். காசோலை மூலமாக 200க்கும் மேற்பட்ட பக்தர்கள் காணிக்கை செலுத்தினார்கள். சேகரிக்கப்பட்ட துகையை ஸ்ரீ ராம்ஜன்மபூமி தீர்த்த க்ஷேத்ர அறக்கட்டளையினரிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி மாலை 5.30 மணிக்கு ஸ்ரீமடம் ப்ருந்தாவன வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தமிழக ஆளுநர் மேதகு ஸ்ரீ பன்வாரிலால் புரோகித் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அறக்கட்டளையின் பொருளாளர் ஸ்ரீ கோவிந்த கிரிஜி ஸ்வாமிகள் மற்றும் பெஜாவர் மடத்து ஸ்வாமிகள் ஸ்ரீ விஷ்வப்ரஸன்ன தீர்த்த ஸ்வாமிகள் ஆகியோரும் திருமலை திருப்பதி தேவஸ்தான Additional Executive Officer ஸ்ரீ தர்மாரெட்டி, விஷ்வஹிந்து பரிஷத் தலைவர் ஸ்ரீ வேதாந்தம், தஞ்சை சாஸ்திரா பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீ வைத்யசுப்ரமண்மன்யன், ஆடிட்டர் ஸ்ரீ குருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். பக்தர்கள் வழங்கிய சுமார் 6 கோடி ரூபாய்க்கும் மேலான துகை அறக்கட்டளையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு முன்னதாக ஸ்ரீ ராமாயண ப்ரசாரத்தில் ஈடுபட்டுள்ள கீழ்க்கண்ட விற்பன்னர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.*

1. *ப்ரும்மஸ்ரீ முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்*
2. *புலவர் திரு. ம.வே பசுபதி*
3. *ஸ்ரீ ராம தீக்ஷிதர்*
4. *ஸ்ரீ ஆ.சுந்தர்குமார்*
5. *ஸ்ரீ ஈரோடு பாலாஜி பாகவதர்*
6. *ஸ்ரீமதி சுதா சேஷய்யன்*

தொடரும்.......

# மாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| *16/02/2021* | செவ்வாய் | வஸந்த பஞ்சமி |
| *19/02/2021* | வெள்ளி | ரத சப்தமி |
| *23/02/2021* | செவ்வாய் | ஏகாதசி |
| *24/02/2021* | புதன் | த்வாதசி, ப்ரதோஷ பூஜை |
| *26/02/2021* | வெள்ளி | பௌர்ணமி பூஜை |
| *05/03/2021* | வெள்ளி | அனுஷம் தேர் |
| *05/03/2021* | வெள்ளி | அனுஷம் பாராயணம் |
| *07/03/2021* | ஞாயிறு | மூலம் தேர் |
| *09/03/2021* | செவ்வாய் | **ஸ்ரீகாஞ்சி சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தி** |
| *09/03/2021* | செவ்வாய் | ஏகாதசி |
| *09/03/2021* | செவ்வாய் | உத்ராடம் தேர் |
| *09/03/2021* | செவ்வாய் | உத்ராடம் பாராயணம் |
| *10/03/2021* | புதன் | த்வாதசி, ப்ரதோஷ பூஜை |
| *11/03/2021* | வியாழன் | மஹா சிவராத்ரி |
| *11/03/2021* | வியாழன் | அவிட்டம் தேர் |
| *11/03/2021* | வியாழன் | அவிட்டம் பாராயணம் |
| *19/02/2021, 26/02/2021, 05/03/2021 - 12/03/2021* வெள்ளிக்கிழமை பூஜை | | |

# பகவத் கீதையின் அமைப்பு

ப்ரதீபப் பேழை

## அத்தியாயம் 1

AºáúÚ Â å õu ÷¯õP®

*ச்லோகம் 1 : திருதராஷ்டிரன் சஞ்சயனிடம் போர்க்களத்தில் என்ன நடக்கிறது எனக் கேட்கிறான்.*

*ச்லோகம் 2 முதல் ச்லோகம் $20\frac{1}{2}$ வரை : சஞ்சயன் படைகளின் அணிவகுப்புகளையும், தலைவர்கள் தயாராதலையும் கூறுகிறான். ச்லோகம் $20\frac{1}{2}$ முதல் ச்லோகம் 23 வரை - அர்ஜுனன் கண்ணனைக் கேட்டுக் கொள்கிறான் - இரு படைகளுக்குமிடையில் தேரை நிறுத்துமாறு.*

*ச். 24 முதல் ச். 271 வரை- பார்த்தன் ஆசாரியர்களையும், உறவினர்களையும் கண்டு கலக்கமுற்றுப் பின்வருமாறு பேசப்போவதாக இங்கே சஞ்சயன் கூறுகிறான்.*

*ச். $27\frac{1}{2}$ முதல் 46 வரை-அர்ஜுனன் கூறுபவை. என் உயிர் போயினும், நான் கொலைத் தொழில் புரியமாட்டேன் அரசு ஆசையினால் நம் மக்களையே கொல்வதா?--என்பன போன்ற வார்த்தைகள். ச். 47-வில்லம்பை விடுத்து, அர்ஜுனன் தேர்த்தட்டில் பின்பகுதியில் உட்கார்ந்து விட்டதாகக் கூறி முடிக்கிறான் சஞ்சயன்.*

## அத்தியாயம் 2

é õ [ Q¯ ÷¯õP®

*சலோகம் 1. கண்ணீர் உகுத்துக் கலங்கி நிற்கும் பார்த்தனைப் பார்த்துப் பகவான் பகர்வதாகக் கூறுகிறான் சஞ்சயன்.*

*ச். 2-ம் ச். 3-ம் பகவான் பேச்சு.*

क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परंतप । (श्लो)

*கீழ்த்தரமான இதய நெகிழ்ச்சியை ஒழித்து எழுந்து நில்.*

*ச். 4 முதல் 8 வரை-அர்ஜுனன் பேச்சு.*

*ச். 9-10. மௌனியான தனஞ்சயனை நோக்கிச் சிரித்தவாறு கண்ணன் பேசியதைத் தெரிவிக்கிறான் சஞ்சயன்.*

*ச். 11 முதல் 53 வரை-கண்ணன் பேச்சு.*

ஆத்மாவுக்குப் பிறப்பு இறப்பு இல்லை. உயிர் உடலை விட்டுப் பிரிதல் மனிதன் ஆடையைக் களைவது போன்றது. (ச். 22. वासांसि जीर्णानि...)

முக்கியமான ச்லோகம் 47.

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कादाचन ।
मा कर्मफलहेतुर्भूर्मा ते सङ्गोऽस्त्वकर्मणि ।।

விளைவில் நெஞ்சைச் செலுத்தாமல், செயல் மட்டும் புரிவாயாக. செய்வன திருந்தச் செய்வதே யோகம் என்னும் புதிய வரையறை யோகத்திற்கு 50-ஆம் ச்லோகத்தில் உள்ளது. योग: कर्मसुकौशलम् .ச். 54. ஸ்திதப்பிரஜ்ஞனின் இலக்கணம் யாதென்று பார்த்தன் கேட்கிறான்.

ச். 55 முதல் 72 வரை- பகவான் ஸ்தி தப்பிரஜ்ஞனுக்கு விளக்கம் தருகிறார்; காந்தியடிகளின் தினசரிப் பிரார்த்தனையில் கூறப்பட்டு வந்த பகுதி சுருக்கமாக वीतरागभयक्रोध: स्थितधीर्मुनिरुच्यते (ச். 56) என்பதைக் கருவாகக் கொள்ளலாம், ஸ்திதப்பிரஜ்ஞன் விளக்கத்திற்கு.

## அத்தியாயம் 2

## Pº© ÷¯õP®

ச். 1-2- பார்த்தனின் பேச்சு. செயலைவிட அறிவே சிறந்த தெனில், என்னை என் கொடுஞ்செயலில் மாட்டுகிறீர்கள்?

ச். 3 முதல் 35 வரை- பகவான் அருளுதல்.

கர்மேந்திரியங்களை மட்டும் அடக்கி மனத்தினால், இந்திரிய விஷயங்களையே சுற்றி வருதல் பொய் ஒழுக்கம் ஆகும். (ச். 6)

இங்கு யாகத்தின் மேன்மையும் கூறப்படுகிறது. (ச் 9-13)

கண்ணன் கர்மம் புரிந்து வீடு பெற்றவர்களுள் ஜனகனைக் கூறுவார். (ச். 20) அடுத்து 35-ஆம் ச்லோகம் ஸ்வதர்மத்தின் பெருமை பேசும்.

ச். 36.. அர்ஜுனன் கேட்பது, மனிதன் என் பாவத்தில் சிக்குகிறான் ?

ச். 37. முதல் 43 வரை-பகவான் வாக்கு.

இந்திரியங்களை ஒடுக்கி, ஆசையை அடக்கச் சொல்வார்.

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 33



மகாபெரியவாளின் உத்தரவு படி திருவட்டீஸ்வரன் பேட்டையைச் சேர்ந்த ஒருவர் ஸ்டான்லி ஆஸ்பத்ரியில் இருக்கும் நோயாளிகளுக்கு ப்ரசாதம் வினியோகம் செய்து அவர்களுடைய உடல் நிலை பற்றி விசாரித்து பகவானைப் ப்ரார்த்திக்குமாறு சொல்லி வருவது வழக்கம். வாராவாரம் இதைச் செய்து வந்தார்.

ஒரு சமயம் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஒருவர் சென்னைக்கு வர உடல் நிலை சரியாக இல்லாததால் ஆஸ்பிடலில் அனுமதிக்கப்பட்டார். வயிற்றில் கட்டி இருப்பதாகவும் அவருடைய கிட்னிகள் பழுது அடைந்திருப்பதாகவும், இன்னும் பல கோளாறுகள் இருப்பதால் ஆபரேஷன் செய்வதைத் தள்ளி வைத்தார்கள். அந்த சமயத்தில் ப்ரசாதம் கொடுக்கும் வெங்கட் ராமைய்யர் அவருக்கும் ப்ரசாதம் தந்தார். அவரும் அதை பயபக்தியுடன் வாங்கிக் கொண்டார். ஆச்சர்யம் அன்று இரவு பெரியவா அவருடைய கனவில் தோன்றினார். அவர் பெரியவாளைப் பார்த்ததேயில்லை.

மறு நாள் மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்தபோது வயிற்றில் உபாதை இல்லை, ஜுரமும் தணிந்து விட்டது . இதைக்கண்ட அவர்கள் அதிசயப்பட்டனர். ப்ரசாதம் தரும் அவருடைய விலாசத்தை அவர்களிடம் அவர் கேட்க ஒரு வாரம் கழித்து வருவார் என்று கூறினர். அடுத்துச் செய்யப்பட்ட பரிசோதனைகளிலும் அவருக்கு எல்லாம் இயல்பாய் (normal) இருப்பது கண்டு மருத்துவர்கள் அவரை மறு நாள் டிஸ்சார்ஜ் செய்வதாகக் கூற அவரோ ப்ரசாத வினியோகர் வரும் வரை இருப்பதாகக்கூறி விட்டார். வழக்கம்போல் வெங்கட்ராமைய்யர் வந்தபோது அவரிடம் ''உங்கள் ப்ரசாதம் என்னைக் குணப்படுத்திவிட்டது. அந்த மகானைக் காண நான் ஆசைப்படுகிறேன்'' என்று கூற அவருடன் ஜெர்மானியர் பெரியவாளைக் காண நூம்பல் க்ராமத்திற்கு வந்தார். ஜெர்மானியர் தேம்பித் தேம்பி அழுத வண்ணம் பெரிவா சமீபம் நின்று கொண்டிருந்தார்.அவருக்குப் பெரியவா கையைத் தூக்கி ஆசீர்வாதம் செய்து ஒரு பழத்தை எடுத்து அவருக்குக் கொடுக்கச் சொன்னார்கள். அவரும் விடை பெற்றுக் கொண்டு சென்றார். பின்னர் இந்தியாவிற்கு வரும் போதெல்லாம் பலமுறை பெரியவாளைத் தரிசனம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

# புராணக் கதை

## காஞ்சி வாதூலன்

பௌராணிகர் யோசனையில் ஆழ்ந்திருந்தார். சிஷ்யன் என்ன புதுக் கதை இன்று கூறுவீர் என்று. கெட்டதை அழிக்க யுத்தம் மட்டுமல்ல யுக்தியும் தேவை என்று கூறி சொல்லாலானார். தாரகாசுரன் முருகனால் மாய்ந்தபின் அவனுடைய மூன்று பிள்ளைகள் தாரகன், வித்யுன்மாலி, கமலாக்ஷன் மிகவும் துக்கத்தில் ஆழ்ந்து கடுமையான தவம் செய்ய ஆரம்பித்தனர்.

அவர்களுடைய தவத்தை மெச்சி ப்ரம்மா வரம் அளிக்க தோன்றினார். அவர்களும் சாகா வரம் கேட்க அதை மறுக்க அவர்கள் ஒரு புதிய வரம் கேட்டனர். பொன்னாலான நகரம் தாரகனுக்கும், வெள்ளி வித்யுன்மாலிக்கும், இரும்பு கமலாக்ஷனுக்கும் தேவதச்சன் செய்து தர வேண்டும். பொன்னகரம் ஸ்வர்கத்தைச் சுற்றி வரவேண்டும், வெள்ளி நகரம் ஆகாயத்தைச் சுற்றிவர வேண்டும்.

இரும்பு நகரம் பூமியைச் சுற்றி வர வேண்டும். இவை வெவ்வேறு சுழல் பாதையில் இருந்தாலும் எப்போது அவை ஒரே நேர்க்கோட்டில் வருகின்றனவோ அப்போதுதான் நாங்கள் மரணிக்க வேண்டும். மேலும் நினைத்துப் பார்க்க முடியாத தேரில் வரும் சங்கர பகவான் ஒரே அம்பினால் எங்களை கொல்ல வேண்டும். சங்கரரை நினைத்த ப்ரம்மா அவரது அனுமதியுடன் வரம் ஈந்தார். அவர்களுக்காக மூன்று பட்டினங்கள் தயாராயின. அவர்களும் மகிழ்ச்சியுடன் அதில் வசித்துக்கொண்டு சிவாராதனை செய்து வந்தனர்.

சிவ பக்தர்களாகிய அவர்களை சிவபிரான் ஒன்றும் செய்யமாட்டார் எனும் மனோ பலத்தில் ராஜ்யம் நடத்தினர். அகம்பாவத்தால் மூன்று அசுரர்களும் அவர்களுடைய துஷ்ட லீலைகளை ஆரம்பித்து தேவர்களுக்கு ஊறு விளைவிக்க அவர்களும் சிவனிடம் முறையிட்டனர். அவர் என் பக்தர்களுக்கு ஊறு செய்ய மாட்டேன், விஷ்ணுவிடம் முறையிடச் சொன்னார்.

எத்தனைகாலம் அவர்கள் சிவாராதனை செய்கிறார்களோ அவர்களை அதுவரையில் ஒன்றும் செய்யமுடியாது என்று விஷ்ணுவிற்குத் தெரியும். எனவே அவர் ஒரு சூழ்ச்சி செய்தார். ஒரு யதியை உண்டாக்கி அவர் மூலம் வைதிக சிவ வழிபாட்டிற்கு எதிராக ப்ரசாரம் செய்யச் சொன்னார். ஆனால் அது எடுபடாமல் போகவே நாரத முனிவர்

மூலமாக இதைச் செய்யச் சொன்னார். நாரதரும் தாரகனிடம் இந்த புதிய வித்யை மிக்க நலன் தரும். தானே அதன் வழியை அனுசரிக்கிறேன், யதியின் வழி சிறந்த வழியாகும் என்றார். அவர் பேச்சைக் கேட்ட தாரகன் யதியை வணங்கினான். சைவ தர்மம் வீழ்ந்தது சிவாலயங்கள் தகர்ந்தன. மக்களும் அரசன் வழியில் செல்ல ஆரம்பித்தனர்.

இவையெல்லாம் நடந்துகொண்டிருக்கும் போது அவர்களது பட்டினங்கள் ஒரே நேர்க்கூட்டில் வந்தன. மீண்டும் தேவர்கள் சிவனிடம் முறையிட சைவ தர்மத்தைக் காக்க மனம் கொண்டார். சூர்யனும், சந்த்ரனும் இரு சக்ரங்கள் வாசுகி பாம்பு கணை, ஆறு பருவங்கள் குதிரைகள். இப்படி ஒரு விசித்ர தேரை விஸ்வகர்மா உண்டாக்க சிவபெருமான் நகைத்து ஒரே கணையை எய்ய வீழ்ந்தன மூன்று பட்டினங்கள். மீண்டும் தழைத்தது சைவ சமயம் என்று கூறி முடித்தார்.

பௌராணிகர் யுத்தத்தால் வெல்ல முடியாததை யுக்தியினால் வெல்ல முடியும் என்பதற்கு இக்கதை ஒரு சான்று.

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

- அனுஷம்
- மூலம்
- உத்ராடம்
- அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

**அத்ர சோணோ தாவதீதி வாக்யவத் அஜஹல்லக்ஷணாபி ந ஸம்பவதி ॥ 164**

*சிவப்புகள் ஓடுகின்றன என்று கூறப்படும் அஜஹல்லக்ஷணைவாக்யமும் தத்வமஸி வாக்யத்திற்குப் பொருந்தாது.*

**தத்ர சோண்குண கமன லக்ஷணஸ்ய வாக்யார்தஸ்ய விருத்தத்வாத் தத் பத பரித்யாகேன ததாஸ்ரய அஸ்வாதி லக்ஷணயா தத் விரோத பரிஹார ஸம்பவாத் அஜஹல்லக்ஷணா ஸம்பவதி ॥ 165**

*சிவப்பு ஓடுகிறது என்பதில் சிவப்பை லக்ஷயார்தமாக வைத்துக்கொள்வது சரியல்ல. சிவப்பு பதத்தை விட்டு விடாமல் அஸ்வம் என்னும் பதத்தை வருவித்துக் கொண்டால் சிவப்புக் குதிரை ஓடுகிறது என்னும் பொருள் தரும் . எனவே அஜஹல்லக்ஷணை ஏற்புடையதே.*

**அத்ர து பரோக்ஷத்வாத் அவிசிஷ்ட சைதன்ய ஏகத்வஸ்ய வாக்யார்தஸ்ய விருத்தத்வாத் தத் அபரித்யாகேன தத் ஸம்பந்தினோ யஸ்ய கஸ்யசித் அர்தஸ்ய லக்ஷிதத்வோபி தத் விரோதபரிஹார அஸம்பவாத் அஜஹல் லக்ஷணா ந ஸம்பவத்யேவ ॥ 166**

*இங்கு தத்வமஸி வாக்யத்தில் லக்ஷ்யாத்தத்தில் அகண்ட சைதன்யத்திற்கும் கண்ட சைதன்யமான ஜீவனுக்கும் லக்ஷணை பொருந்தாது. தத்வ பொருளை விட்டுவிடாமல் இன்னொரு பொருளை வருவித்தாலும் முரண் தீராது. எனவே அஜஹல்லக்ஷணை தத்வமஸி வாக்யத்திற்குப் பொருள் தராது.*

**ந ச தத்பதம் த்வம் பதம் வா ஸ்வாரத்த விருத்த அம்சபரித்யாகேன அம்சாந்தரஸஹிதம் த்வம் பதார்தம் தத்பதார்தம் வா லக்ஷயத்வத: கதம் ப்ரகாந்தரேண பாகலக்ஷணயா அங்கீகரணமிதி வாச்யம் ॥ 167**

*மேலும் தத் பதத்திலும் தவம் பதத்திலும் முரண்களை நீக்கி முரண் இல்லாததைச் ஒவ்வொரு பதத்திலும் சேர்த்து பாகலக்ஷணம் அல்லாமல் கூறலாமே .*

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

**பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா**



க்ருஷ்ணர் ''அழாதே த்ரௌபதி பாண்டவர்களுக்கு என்ன நன்மை

செய்ய வேண்டுமோ அதைச் செய்வேன். ஸத்யமாக உனக்குக் கூறுகிறேன். நீ மீண்டும் ராணியாக ஆவாய்.

நான் த்வாரகையில் அப்போது இருந்ததால் இக்கஷ்டம் உனக்கு ஏற்பட்டது. சூதின் தீமைகளைச் சொல்லி அதைத் தடுத்திருப்பேன். கூப்பிடாமலேயே நான் வந்திருப்பேன். பெண்கள், சூது, வேட்டை, மதுபானம் இந்த நான்கினாலும் மனிதர்கள் மதியிழந்து வாழ்க்கையை இழக்கின்றனர்.

செல்வமிழத்தல், துக்கம் எதையும் அனுபவிக்காமல் இருத்தல், அஸ்லீலமான வார்த்தைகள் இவை அனைத்தும் ஒரே நாளில் ஏற்படும்.

இவ்வாறு கூறிவிட்டு க்ருஷ்ணர் சுபத்ரையையும் அபிமன்யுவையும் கூட்டிகொண்டு த்வாரகைக்குச் சென்றார். த்ருஷ்டத்யும்னனும் தமக்கையின் பிள்ளைகளைக் கூட்டி கொண்டு அத்தினாபுரம் சென்றான். பின்பு பாண்டவர்கள் ஒளி பொருந்திய த்வைத வனத்திற்குள் புகுந்தனர். தர்மராஜனான யுதிஷ்ட்ரரைப் பார்த்து த்ரௌபதி கூறலானாள்.

## த்ரௌபதி

ஓ தர்மாத்வே உமக்குக் கோபம் என்பதே இல்லை. நானும் உமது தம்பிகளும் படும் கஷ்டத்தைப் பார்த்து உமது மனம் துன்பப்படவில்லை. தர்மத்தினாலோ பொறுமையினாலோ, நேர்மையினாலோ, காருண்யத்தாலோ ஒரு மனிதன் செல்வத்தை அடைவதில்லை. நமது வீழ்ச்சியையும் துர்யோதனின் மாட்சியையும் பார்க்க நான் ''கெடுக உலகியிற்றினான்'' என்பேன்.

**யுதிஷ்டிரர்** : அன்புடையவளே பலனை விரும்பி நான் தர்மத்தைக் கடைபிடிக்கவில்லை. தர்மத்தின் பால் இயற்கையாகவே எனக்கு ஈடுபாடு உண்டு. தர்மத்தை வ்யாபார மாக்குபவன் அதன் பலனை அடைவதில்லை. தேவி தர்மம் ஒன்றுதான் மனிதனை ஸ்வர்கம் சேர்க்கும் ஓடம். எக்காரணம் கொண்டும் பகவானைப் பழிக்காதே.

**த்ரௌபதி** : கௌந்தேய தர்மத்தையாவது ஈஸ்வரனையாவது பழிப்பது என் நோக்கமல்ல. பாதிக்கப்பட்டவளான நான் துக்கத்தில் சொன்னவையே அவை.

**பீமன் :** உங்களுக்கு அடங்கி இருந்ததால் நம் கண் முன் ராஜ்யம் பறி போயிற்று. தர்மம், தர்மம் என்று சொல்வதால் என்ன பயன்? எதிரிகளிடம் நம் வீரத்தைக் காட்டுவது அல்லவா நம் தர்மம். நமது க்ஷத்ரிய ஸ்வதர்மத்திலிருந்து பின் வாங்க வேண்டாம். எதிரிகளை அழிக்க நிச்சயம் செய்யுங்கள்.

**யுதிஷ்டிரர்** : தர்மத்தை முழுவதும் அறிந்துகொண்டு வேறுகதியை எப்படிச் செய்ய முடியும்? பலத்துடன் மேருமலையை திருப்ப முடியுமா? நம் எதிரி மன்னர்கள் இப்போது கௌரவர்களுடன் இருக்கிறார்கள். துர்யோதனை வெல்வது இப்போது ஸாத்யமில்லை. மேலும் கர்ணனின் வில்லேற்றும் லாகவம் கண்டபின் எனக்குத் தூக்கம் போயிற்று.

அவர் சொன்னதைக் கேட்டபின் அதன் ந்யாயத்தை உணர்ந்து கோபாவேசத்தில் இருந்த பீமன் அமைதியுற்றான். இவர்கள் அப்படி ஸம்பாஷித்து கொண்டிருந்தபோது சத்யவதியின் புத்ரரான வ்யாஸர் அங்கு எழுந்தருளினார்.

(தொடரும்)

## பணிவுப் பண்பு வளர

''இருக்கட்டுமே, அதிலென்ன விசேஷம்?'' என்றால் ரொம்ப விசேஷம் இருக்கிறது. இந்த மரியாதை உணர்ச்சிதான் விநயம், பணிவு என்று சொல்கிற உசந்த பண்பை வரவழைத்துத் தருகிறது. 'அடி பணிந்து' என்றே நமஸ்காரத்தைச் சொல்கிறோம். இந்தப் பணிவு நன்றாக மலர்ச்சி பெற்று ப்ரகாசிப்பது, ஏனைய பக்தி பாவ பூஜை புரஸ்காரங்களை விடவும் மரியாதையுணர்ச்சியோடு பண்ணுகிற நமஸ்காரத்தில்தான். ஒரு பெரியவருக்கு முன்னாடி பூமியிலே சரீரத்தைத் தள்ளி நமஸ்கரிக்கும் போது இந்த விநயத்துக்கு நன்றாக ரூபகம் கொடுத்து அநுபவித்து ஸந்தோஷப்பட முடிகிறது. அந்த (விநய) மனோபாவத்திற்கு இந்த (நமஸ்கார) க்ரியை ரூபகமாக மட்டுமில்லாமல் இந்த க்ரியையே அந்த பாவம் மேலும் மேலும் வ்ருத்தியாவதற்குப் புஷ்டியும் தருகிறது.

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

**வினா :-** பரம்பொருள் நிர்க்குணமானால், இந்த சகுணம் பிரிவினை ஏன் ஏற்பட்டது?

**விடை :-** சாதாரணமாக மனிதர் எங்கும் நிறைந்த பரம்பொருளையறிந்து அனுபவித்து ஆனந்திக்கும் ஆற்றலற்றவராதலால், நிறைந்த நிர்க்குணமாண அப்பரம் பொருளே அவ்வான் மாக்களிடம் கருணையால், சகுணமான ஒரு வடிவத்தைத் தோற்றுவித்துத் திருவருட் சொரிந்து, அதன்மூலம் அவர்களைத் தன் மயமாக்கிக் கொள்ளும். உண்மையில், அது பரம்பொருள். எங்கும் நிறைந்தது. நிர்க்குணமானது. தெரியாதபோது சகுணம். இதனாலே தான் வேதம் ப்ரச்னோபனிஷத்தில் பரம்பொருளை இரண்டு வகையாகப் பரம் என்றும் அபரம் என்றும் கூறியது.

**வினா :- இதற்கு ஏதேனும் திருஷ்டாந்தம் உண்டா?**

**விடை :-** நெய் உருகிய நிலையில் வெண்மை நிறமும் கட்டியான தன்மையும் இல்லாதிருந்தும், சீதள சம்பந்தம் ஏற்படுங்கால், அதில் கெட்டியும் வெண்மையும் தோன்றுவது போல, ஒரு குணமும் குறியுமில்லாத பரம்பொருள் அஜ்ஞானத்தினின்றும் நீங்காத ஆன்மாக்களை நோக்கிக் கருணை யென்னும் சீதளத்தைத் தழுவி சகலகல்யாண குணங்களையும் சக்திகளையும் தோற்றுவித்து ஏற்றுக் கொள்கிறது.

**வினா :- இதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா?**

விடை:- பரம்பொருள் சகுண ரூபமாய்ப் பிராமண வடிவங்கொண்டு தன்னைக் கடைத்தேற வைத்த மேன்மையை மாணிக்கவாசகர்,

'இந்திரஞாலம் போலவந் தருளி' (கீர்த்தித்திருவகவல், 94) என்றும்

'இந்திரஞாலங் காட்டிய வியல்பும்' (கீர்த்தித் திருவகவல், 43)

என்றும் போற்றி, நிர்க்குணம் சகுணமாயிற்றென்ற கருத்தைக் குறிப்பிடுகிறார்.

### 6. ஜீவன்முத்தி (உயிருடன் வீடுபெறுதல்)

**வினா :- முத்தி இம்மைப்பயனா? மறுமைப்பயனா?**

விடை :- முத்தி இம்மைப் பயனாகும் என்பதாலேதான் ஜீவன் முத்தி' ஒப்புக் கொள்ளப்படுகிறது.

**வினா :- இவ்வாறு கூறுதற்கு ஆதாரம் என்ன ?**

விடை:-' அவனை இவ்விதம் அறிந்தவன் இம்மையில் அமிருதத்துவம் என்னும் முத்தியை அடைந்தவனாகிறான் ' என்று கூறப்பட்டிருக்கிறது. இது, ' இஹ' என்னும் இம்மைச் சொல்லுடன் கூடி, 'புருஷஸூக்தத்தில் இருக்கிறது.

***வினா:-*** *இம்மை என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன?*

***விடை:-*** *இம்மை என்னும் சொல்லுக்குப் பகவானால் கீதையில் ' உடலை விடுவதற்குமுன் என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது.*

***வினா :-*** *ஜீவன் முக்தியைத் தெரிவிக்கின்ற வேறு ஆதாரங்கள் எவை?*

***விடை:-*** *இம்மையிலறிந்தால் உண்மையிருக்கிறது' என்பது ஈசாவாஸ்ய உபநிடதம். வாமதேவ முனிவருக்குக் கருவிலேயே முத்தி கிடைத்ததென்று 'காப்பத்தில் இருந்து கொண்டே இவற்றையறிந்தே' என்று தொடங்கும் ஐதரேய உபநிஷத்தும் விளக்குகிறது.*

***வினா :-*** *தமிழ்மொழியில் ஜீவன்முத்தியைத் தெரிவிக்கின்ற ஆதாரம் யாது?*

*மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக்காஞ்சியில்*

*சிறந்த வேதம் விளங்கப் பாடி விழுச்சீ செய்திய வொழுக்கமொடு புணர்ந்து*

*நிலமமர் வையத் தொருதா மாகி உயர்நிலை யுலக மிவணின் றெய்தும்*

*என்பதும்*

*திருவள்ளுவர் திருக்குறளில்*

*ஆராவியற்கை யவா நீப்பி னந்நிலையே*
*பேரா வியற்கை தரும்*
*என்பதும்.*

***விடை:-*** *சடகோபமுனிவர் அருளிய திருவாய்மொழியில்*

*நன்றாய் ஞாலம் கடந்துபோய் நல்லிந்திரியமெல்லா மீர்த்து*
*ஒன்றாய்க் கிடந்த வரும்பெரும் பாழுலப்பிலதனை யுணர்ந் துணர்ந்து*
*சென்றாங் கின்பதுன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்*
*அன்றேயப்பொழுதே வீடதுவே வீடு வீடாமே (8, 6, 8)*
*என்பதும் ஆதாரம் ஆகும்*

***வினா :- மரணத்திற்குப் பின்னர் தான் முத்தி கிடைக்குமென்று கூறினாலென்ன?***

***விடை :-*** *முத்திக்கு வேண்டிய சித்தசுத்தி உயிருள்ள போதே கிட்டாதாயின், மரணத்தால் மாத்திரம் தோன்றும் என்பது பொருத்தமாய் இல்லை. இந்த ஜன்மத்தில் ஜீவித்திருக்கும் பொழுதே முத்தியடைவது என்பதுதான் பொருத்தமாயிருக்கிறது. இந்த ஜீவன் முத்தியே ஸாக்ஷான் முத்தியாகிறது.*

*(தொடரும்)*

# ஸ்ரீமத் பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி 2

*ராமாயணம் ஸ்ரீனிவாசன்*

*அழகை விரும்புவோர் கந்தர்வர்களையும் நல் மனைவி கிடைக்க விரும்புவோர் ஊர்வசியையும் தலைவனாக இருக்க விரும்புவர் ப்ரம்மாவையும் பூஜிக்க வேண்டும்.*

*எங்கும் எதிலும் விருப்பமற்றவர், யாவற்றிலும் விருப்பம் உடையவர் அல்லது முக்தியை மட்டும் விரும்புவர் என்று எவராக இருந்தாலும் தீவ்ரமான பக்தி யோகத்தால் எங்கும் நிறைந்துள்ள பரம புருஷனை பூஜிக்க வேண்டும்.*

**பகவானின் நினைப்பு இன்றி வாழும் மனிதனின் நிலை எத்தகையது?**

*மரங்கள் உயிர் வாழ்கின்றன அல்லவா? கொல்லன் பட்டரையில் துருத்தியும் மூச்சு விடுகின்றது.*

**விலங்கினங்கள் உண்கின்றன, ஸம்போகம் செய்கின்றன. இவைகளைக் காட்டிலும் பூஜிக்காதவன் எப்படி உயர்ந்தவன்?**

*எவனது காதுகள் பகவானின் திரு நாமத்தை ஒரு தடவையேனும் கேட்டதில்லையோ அவன் மனித வடிவில் திரியும் விலங்கே.*

*ஈரடியால் மூவுலகங்களையும் அளந்த பகவானின் திருக்குணங்களைக் கேளாத காதுகள் காதுகள் அல்ல, எலியின் வளை அல்லது பாம்பு புற்று. இறைவனின் துதிகளைப் பாடாத நாக்கு தவளையின் நாக்கே.*

*தலையில் கிரீடம் சூட்டப்பட்டிருந்தாலும் முகுந்தனை வணங்காத தலை வெறும் சுமையே. இரு கைகளிலும் பூஷணங்கள் அணிந்திருந்தாலும் பகவானின் திருவடியில் ஒரு பூவையாவது போடத கைகள் சவத்தின் கைகளே .*

*பகவானின் திவ்ய மங்கள வடிவத்தைக் காணாத கண்கள் மயில் தோகையில் காணப்படும் கண்களே. கோயிலுக்குச் செல்லாத கால்கள் மரக்கால்களே.*

*பக்தர்களின் திருவடித் துகள்களை ஒரு முறையேனும் தலையில் சாற்றப்பெறாதவன் நடைபிணமே. அடியார்களால் அர்ச்சிக்கப்பட்ட துளசி மணத்தை நுகராதவன் மூச்சுவிடும் சவமே.*

*பகவான் ஸ்ரீஹரியின் நாமங்களைச் சொல்லக் கேட்கும்போது எவனது உள்ளம் உருகவில்லையோ, கண்கள்ஆனந்தக் கண்ணீர் விடவில்லையோ, உடல் புல்லரிக்கவில்லையோ அவனது உள்ளம் இரும்பைவிடக் கடினமானது.*

**மனிதன் வாழ்வில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் ?**

அறிவுடையவன் எங்கும் எதிலும் நல்லதை தேனீ தேன் சேகரிப்பதுபோல் ஸாரத்தை எடுத்துக் கொள்ள வெண்டும். முன்னோர்கள் காட்டிய வழியில் அவைகளை ஏற்று நடக்கும் மனிதன் விரைவில் தன் விருப்பம் நிறைவேறப் பெறுகிறான்.

முன்னோர்கள் வழியை புறக்கணித்து தன்னிச்சைப்படி வழியைக் கைக்கொள்பவன் மூடன் அவனது முயற்சி கை கூடாது.

போலிகள் அதர்ம வழியை தர்மவழியாகக் காட்டுவது நாத்திகம். அதை பாகண்டம் என்பர். இதைச் செய்பவன் தீயவனும் நல்லவன் போல் காக்ஷி அளிப்பான்.

**செல்வம் யாரை வந்தடையும்?**

நற்குணம் கொண்டவர் நல்லொழுக்கம் உடையவர், நன்றி மறவாதவர் பெரியோரை மதிப்பவர் ஆகியோரை செல்வம் தானே வந்தடையும்.

நற் புதல்வர் '' நல் மகனைப்பெற்றவர் நல் உலகங்களை அடைகின்றான்'' இந்த வேத வாக்யம் முழுதும் உண்மையே. ஹிரண்ய கசிபு ப்ரஹ்லாதனால் நற்கதி அடைந்தானே.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# தத்வ சிந்தனை

இளம்பூரணர்

''யாதும் ஊரே யாவரும் கேளிர்; தீதும் நன்றும் பிறர் தர வாரா

நோதலும் தணிதலும் அவ்வாறோரன்ன சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் சஇலமே முனிவின் இன்னாதென்றலும் இலமே
மின்னொடு வானம் தண்துளி தலைஆனாது கல்பொருது

இரங்கும் மல்லற் பேர்யாற்று நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்

முறைவழிப்படூஉம் என்பது திறவோர் காட்சியின் தெளிந்தனம்
ஆகலின் மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'' கணியன் பூங்குன்றனார்

இப்பாடல் சங்க இலக்கியத்தில் புற நானூறில் 192 ஆம் பாடலாக வருகிறது. இதன் முதல் வரி அரசியல் வாதிகளால் நிரம்பப் பேசப்படும். அதில் அதற்கப்புறம் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பது அவர்களுக்குத் தெரியாது. இப்பாடல் விதி என்று சொல்லப்படும் ஊழ் பற்றியும் கர்ம சித்தாந்தம் பற்றியும் ஒருவன் அதனால் பாதிக்கப்படக் கூடாது பற்றியும் விரிவாகக் கூறுகிறது.

இந்நாடு முழுவதும் ஸனாதன தர்மம் இருந்தது என்பதற்கு இப்பாடல் சான்றாகும். விதி கர்ம வினை ஸ்திதப்ப்ரக்யத்வம் இவை மூன்றும் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ளவையே. இதையே ஆசிரியரும் ''திறவோர் காட்சியின் தெளிந்தனம்'' என்னும் கூற்றால் அறியலாம்.

கர்ம வினைப்படியே உயிர் தோற்றம், ஊழ்படியே அதன் வழி தீமையும், நன்மையும் அவரவர் கர்மவினைப்படித்தான். ஒருவன் மிகச் சிறந்தவனாக இருந்தால் அது அவன் செய்த நற்கர்மா, இழி பிறப்பாக இருந்தால் அவன் செய்த தீய கர்மா. ஆற்றில் ஓடும் நாவாய் போல் இவ்வாழ்க்கை போகும். ஏற்றம் தாழ்வு இதெல்லாம் இயல்பானவையே. அதற்காக இவ்வுலகை வெறுப்பதோ கொண்டாடுவதோ கூடாது. ஆதலால் எல்லோரும் சமமே. இப்பரந்த உலகில் எல்லாம் நம் நாடே எல்லோரும் நம் உறவினர்களே.

பிதா சிவ: மாதா ச பார்வதீ சிவ பக்தாச்ச பாந்தவா:
ஸ்வ தேசோ புவனத்ரயம் '' என்னும் ஸ்லோகம் இதை எதிரொலிக்கும்.

இவ்வுலகில் இருக்கும் நாம் குறுகிய எண்ணங்களை விட்டொழித்து பரந்த நோக்கத்துடன் இருக்க இப்பாடல் துணை புரியும்.

''அயம் நிஜ: பரோ வேதி சிந்தனா லகு சேதஸாம்
உதார சரிதானாம் வஸுதைவ குடும்பகம் '' என்னும் ஸுபாஷிதம்
இதையே கோஷிக்கும். ''யத்ர விஸ்வம் பவதி ஏக நீடம் ''

எங்கு இந்த உலகம் ஒரு கூட்டிலே வசிக்கும்'' என்னும் உபனிஷத் பறை அறையும். கணியன் பூங்குன்றனார் ஒரு நல்ல சிந்தனையாளர். பரந்த நோக்கம் உடையவர் ,ஒரு ஸ்திதப்ப்ரக்யர் என்பது தெளிவு. பொதுவாக சங்க இலக்கியத்தில் தத்வ சிந்தனை அவ்வளவாக வராது. வீரம் காதல் பற்றி பேசும் இலக்கியத்தில் உயர்ந்த சிந்தனையைத் தந்தவர் ஆசிரியர். பரந்த மனப்பான்மையை உலகுக்கு எடுத்துத் தந்தவர். அவர் புலவர்களில் சிறப்புப் பெறுகிறார். (பூங்குன்றம் என்பது ராமனாதபுரத்தில் உள்ள மகிபாலன் பட்டி என்னும் ஊராகும்).



★ குடும்பத்தின் மீது பாசமும், மதிப்பும், கடமை உணர்வும், பெற்றோர்களுக்கும் முதியோர்களுக்கும், உதவக்கூடிய மனப்பான்மை, உடைய, மாணவ சமுதாயத்தை உருவாக்குகிறோமா?

★ அன்றைக்கு, சாதாரணமாக தண்ணி கிடைச்சது. இன்றைக்கு? அபூர்வமாக மாறிவிட்டது. அந்த காலத்துல சுலபமா கிடைச்சது சிலது, இப்போ கஷ்டமாயிடுத்து.

★ அந்த காலத்துல கஷ்டமாருந்தது, புதுசா வந்து ஸுலபமாக மாறி விட்டது. இந்த காலத்துல, குடும்பப் பொறுப்பு ஒண்ணு தான், சின்ன வயஸுல வரும். இந்த காலத்திலே, நாட்டிற்கு சேவை செய்யக்கூடிய பொறுப்பு அளவுக்கு, இந்த இளைஞர்களுக்கு நிறைய, வாய்ப்பெல்லாம் குடுத்திருக்கிறார்கள்.

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ




108. **கேள்வி : எல்லாரும் சொல்லக்கூடிய ஸ்னான ஸங்கல்பம் எது?**

அதிக்ரூர மஹாகாய
கல்பாந்த தஹனோபம
பைரவாய நமஸ்துப்யம்
அனுஞ்யாம் தாதுமர்ஹஸி।
துர்போஜன துராலாப துர்ப்ரதிக்ருஹ்ய ஸம்பவம்
பாபம் ஹர க்ஷிப்ரம் ஸஹ்யகன்யே நமோஸ்து தே
த்ரிராத்ரம் ஜான்வீதீரே பாஞ்சராத்ரம் யாமுனே
ஸத்ய புனாது காவீரீ பாபம் ஆமரணந்திகம்.
கங்கே கங்கேதி யோ ப்ரூயாத்
ஸஹஸ்ரைரபி முச்யதே ஸர்வபாபேப்ய: விஷ்ணுலோகம் கச்சதி.

109. **கேள்வி : சிகையிலிருந்து நீரை விடும்போது சொல்லப்படும் மந்த்ரம் என்ன?**

**பதில் :** லதா குல்மேஷு வ்ருக்ஷேஷு பிதரோ யே வ்யவஸ்திதா:
தே த்ருப்திமாயாந்து மயோஸ்ருஷ்டை: சிகோதகை: ॥

மண்டியிருக்கும் புதர்களிலும் மரங்களிலும் எந்த பித்ருக்கள் உள்ளாரோ அவர்கள் என் சிகையிலிருந்து விழும் நீரால் த்ருப்தியடையட்டும்.

110. **கேள்வி :** இரண்டாவது வஸ்த்ரத்தின் அவஸ்யமென்ன?

**பதில் :** ஹோமத்தில் தேவ பூஜையில் படிக்கும் சமயத்தில் போஜன சமயத்தில் ஒரே வஸ்த்ரத்துடன் இருக்க கூடாது. ஆகவே இரண்டாவது வஸ்த்ரம் தேவை.

111. **கேள்வி :** ஸந்த்யாவனதனத்தின் பலன் என்ன?

பதில் : எந்த த்விஜன் தினமும் ஸந்த்யாவந்தனம் செய்கிறானோ அவன் பாபங்கள் விலகி ப்ரம்மலோகம் சேருகின்றான். இவ்வுலகில் கர்மாக்களை விட்டவர்களை தூய்மைப் படுத்த ப்ரம்மா ஸந்த்யாவந்தனத்தை ஏற்படுத்தினார். த்விஜன் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பாபம் மூன்று கால ஸந்த்யாவந்தனத்தால் நசிக்கும்.

112. **கேள்வி :** சந்த்யா வந்தனம் செய்யாதவற்கு ஏற்படும் தோஷமென்ன ?

**பதில் :** அதன் அருமை தெரிந்தும் செய்யாதவர்கள் இழி பிறப்பெய்துவர் வாழும் போதும் இழிபிறப்பாளர்களாவார்கள். அவர்கள் அசுத்தர்கள், கர்மா செய்ய அருகதை அற்றவர்கள், எந்த கர்மாவைச் செய்தாலும் அதற்குப் பலன் கிட்டாது.

113. **கேள்வி :** ஸந்த்யாவந்தனம் செய்யும் காலமென்ன?

**பதில் :** சூர்ய உதயத்திற்கு 2 நாழிகைக்கு முன் செய்ய வேண்டும். நக்ஷத்ரங்கள் இருக்கும் போது செய்வது உத்தமம். அவை மறைந்த பின் செய்வது மத்யமம். சூர்யன் உதித்தபின் செய்வது அதமம்.

114. **கேள்வி :** மூன்று காலங்களில் ஸந்த்யா வந்தன தேவிகளின் பெயர் என்ன?

**பதில் :** காலை காயத்ரி, மத்யான்னம் ஸாவித்ரி, சாயங்காலம் ஸரஸ்வதி.

115. **கேள்வி :** இவர்களின் வடிவமென்ன?

**பதில் :** காயத்ரி ப்ரம்ம வடிவம் ஸாவித்ரி ருத்ரவடிவம்

116. **கேள்வி :** காயத்ரி ஜபத்தின் விசேஷமென்ன?

**பதில் :** வீட்டில் ஜபம் செய்தால் சாதாரண பலன். பசு மாட்டுக் கொட்டகையில் நூறுமடங்கு. கானகத்தில் ஆயிரம் மடங்கு, நதிக்கரையில் லக்ஷம் மடங்கு, கோயில்களில் கோடிமடங்கு, சிவனுக்கு முன்னால் அமர்ந்து செய்தால் எண்ணிலடங்கா பலன்.

117. **கேள்வி :** ஸந்த்யாவனதனத்தை எந்த திக்கில் செய்ய வேண்டும் ?

**பதில் :** பொதுவாக கிழக்கு நோக்கி செய்வது உத்தமம். வடக்கு நோக்கியும் செய்யலாம்.

(தொடரும்)